வாழ்வாஸ்கு வாழ்வோம்

(வாழ்வுக்கோர் வழிகாட்டி)

மணிவிழா மலர்



திரு.தா.கோபாலகிருஷ்ணன்
(ஆசிரியர்) MA, P.G.D.E

அன்புடன் ஸ்ரீகிருஷ்ணர் அவர்களுக்கு.

24/09/2024

வாழ்வாங்கு வாழ்வோம்

(வாழ்வுக்கோர் வழிகாட்டி)

திரு.தா.கோபாலகிருஷ்ணன் M.A, P.G.D.E

அவர்களது

மணிவிழா மலர்

கிருஷ்ணகானம்
குமரன் வீதி
களுவாஞ்சிகுடி

18.04.2016.

நூல் விவரம்

நூலின் தலைப்பு : வாழ்வாங்கு வாழ்வோம்

ஆக்கம் திரு.தா. கோபாலகிருஷ்ணன்

முதற் பதிப்பு : 18.04.2016

பக்கம் : 74

அட்டை பட ஓவியம் : திரு.செ. டானியல்
முன்னாள் உ.க.பணிப்பாளர் (அழகியல்)

சைஸ் : 15 X 21 செ.மீ

பிரதி : 1000

தட்டச்சு : செல்வி. கோ. கிருஷ்ணமோகனா

கணிணி வடிவமைப்பு :
செல்வி. அ.கோமளா

அச்சுப் பதிப்பு :
அக்ஷயன் அச்சகம்,
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை

Rs 125.00

வாழ்வாங்கு வாழ !

அன்பு காட்டுவோம்.
ஆதரவளிப்போம்.
இன்புற்று வாழ்வோம்.
ஈந்து கொடுப்போம்.
உதவி செய்வோம்.
ஊக்கமோடு உழைப்போம்.
எளிமையாய் பழகுவோம்.
ஏழைகளுக்கு உதவுவோம்.
ஐயமிட்டு உண்போம்.
ஒற்றுமையாய் வாழ்வோம்.
ஓய்வுடன் உழைப்போம்.
ஔவியம் பேசோம்.

சமர்ப்பணம்

அன்பொடு அறிவூட்டி

அறிவெனும் ஒளியூட்டி

அவனியில் ஆளாக்கிய

என் இனிய அன்னைக்கும்

என் அருமைத் தந்தைக்கும்

இந்நூல் சமர்ப்பணம்

பதிப்பகத்தார் உரை

களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு.தா.கோபாலகிருஷ்ணன் ஆசிரியர் அவர்களது "வாழ்வாங்கு வாழ்வோம்" என்ற இந்நூலானது மக்கள் தம் வாழ்க்கையில் கடைப்பிக்க வேண்டிய பல்வேறுபட்ட அம்சங்களைக் கொண்டதாக அமைகிறது.

ஒருவன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை பல்வேறு வகையான பண்பாட்டியல் அம்சங்களைத் தத்தம் இனப்பண்பாடு, கலாசாரம் என்பவற்றிற்கேற்ப கடைப்பிடித்து வருகிறான். ஒவ்வொரு இன்ப - துன்ப நிகழ்விலும் தம் சுற்றத்தாருடன் சேர்ந்து செய்ய வேண்டிய கடப்பாடுகளே அவையாகும். அவற்றுள் மிக முக்கியமானவற்றை மட்டும் இரத்தினச் சுருக்கமாக எமக்கு எடுத்துத் தருவது மிகவும் போற்றத்தக்கதாகும்.

வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளுக்கு சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் நல்ல நாள் பார்ப்பது வழக்கம். இவற்றுள் மிக மிக முக்கியமானவற்றை மட்டும் இங்கு திரட்டித் தருகிறார். இவை பற்றி பல்வேறுபட்ட பெரியோர் விரிவாகக் கூறியிருப்பினும் அவை பாமர மக்களுக்கு விளங்காமல் இருக்கலாம். அவற்றை இலகுவான நடையில் சுருக்கமாகத் தருவதால் வாசகர் படிக்கும் போது உணர்ந்து கொள்வது மட்டுமல்லாது சோதிடர்களிடம் நல்ல நேரத்தைக் கேட்டு நிச்சயிப்பதற்கும் வாய்ப்பளிக்கும்.

எனவே இந்நூலைக் கையாளும் யாவரும் ஏதோ ஒரு வகையில் கொடுத்து வைத்தவர்கள் என கூறத் தோன்றுகின்றது. ஆசிரியர் அவர்களது 60 ஆவது அகவையில் இப்பொக்கிசம் வெளியிடுவதிலிருந்து அவர் தம் வாழ்நாள் முழுவதும் பொதுநலத் தொண்டராக வாழ்ந்தார் என்பது புலனாகிறது. இதுபோல் எதிர்காலத்திலும் வாழ்வின் ஒளிக்கான நல்ல விதைகளை மக்கள் மனதில் விதைத்து, வாழ்வுக்கு வழி காட்டியாகத் திகழ நேயர்கள் சார்பிலும், பதிப்பகத்தார் சார்பிலும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"உயர்க நல்லெண்ணம்
ஓங்குக வையகம்"

பதிப்பக்தார்
அக்ஷயன் அச்சகம்,
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.

ஆசியுரை

நெஞ்சார்ந்த நினைவோடு நீடுக பல்லாண்டு.

"நிலம், நீர், தீ, வளி, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" என்பது தொல்காப்பியரின் கூற்று, பஞ்சபூதக் கலவையே உலகம் என்று சுட்டுகிறார்.

மண்ணின் நல்லவண்ணம் வாழலாம் - இது சம்பந்தரின் வாக்கு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும் - இது பொய்யாமொழிப் புலவர் வாக்கு

மேற்குறித்த ஆன்றோர்கள் உலகின் நிலையையும் மனிதனின் வாழ்வையும் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றார்கள். மனிதன் மனிதனாக வாழ, இந்த வையகத்தில் எத்தனையோ நன்நெறிகளை நற்றமிழில் சொற்றிறம்பாமல் வகுத்திருக்கின்றார்கள். பண்டைய காலங்களில் பண்பு நிறைந்த, அன்புகனிந்த மனித வாழ்வையே சான்றோர்கள் எதிர்பார்த்தார்கள். அத்தகைய வாழ்வை மனிதன் அடைவதற்கு ஆரம்ப காலங்களில் குருகுலப் பயிற்சிகள் மூலமும், ஆத்மீகப் பயிற்சிகள் மூலமும், தெய்வீக வழிகாட்டலின் மூலமும் நெறிப்படுத்தி வந்தனர். ஆனால் சம காலங்களில், அந்நிலை தளர்ந்த நிலையிலேயே போய்க் கொண்டிருக்கிறது. ஒழுங்கும், ஒழுக்கமும் நிறைந்த ஒரு சமூகத்தைக் காண முடியாமல் மானிடம் தவிக்கிறது. உண்மையையும் சத்தியத்தையும் மண்ணில் தொலைத்துவிட்டு, அதைத் தேடிக்கொண்டே ஒருபுறத்தில் நாம் அழிந்து போகிறோம்.

இந்நிலையைத் தடுக்கக் காலங்காலமாகச் சான்றோர்கள் பலவழிமுறைகளை நன்கு வழிபடுத்தியிருக்கின்றனர். அதே வழியிலே இன்றும் இந்நிலையை உணர்ந்த ஆசிரியப் பெருமக்களில் ஒருசில சான்றோர்கள் தம் சிந்தனையை மானிடத்தின்பால் விதைக்க முயன்றார்கள். அந்த வகையிலே,

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலையின் தெளிவு கட்டுரை வண்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே"

எனும் நன்னூலாரின் வாக்குக்கு ஒப்ப இத்தகு தகமையுடைய ஆசிரியப் பெருமக்கள் மன்னுயிர் ஓம்பி வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். இத்தகையோர் உயிர்ப்புடைய சிந்தனைகளைச் சிந்தையில் பதிக்க விழைகின்றனர். அத்தகைய விழைவினால் வந்த விளைச்சலே இந்நூலின் அன்பர் திரு.தா. கோபாலகிருஷ்ணன் ஐயா அவர்கள். செட்டிபாளையம் என்னும் திருவருள் நிறைந்த பூமியைப் பிறந்த இடமாகக் கொண்ட இவர், பெருமையும் புகழுங் கொண்ட களுவாஞ்சிகுடி மண்ணைப் புகுந்த இடமாகக் கொண்டவர். இளமை முதல், செட்டியூர் மண்ணில் வசந்தன், கும்மி, கோலாட்டம், கண்ணகி வழக்குரை ஆகிய கிராமிய இலக்கியங்களில் தோய்ந்தது இவருள்ளம். தெய்வ நம்பிக்கை, கல்விப் புலமையின் தெளிவு, தேடல், நன்நெறி நோக்கம் ஆகியவற்றை அணிகலனாகக் கொண்ட கோபாலகிருஷ்ணன் ஐயா அவர்கள் தமது அறுபதாவது அகவையில் மனித சமூகத்துக்குக் காத்திரமான பயனுள்ள "வாழ்வாங்கு வாழ்வோம்"எனும் தலைப்பிலான அறநெறியும், அருள்நெறியும் கலந்த நூல் ஒன்றினை வெளியிட முன்வந்தமையையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மனிதன் பிறக்கிறான், தன் பணி முடிந்து, மண்ணில் மறைகிறான்.

அந்த இடைவெளிக்குள் அவன் வாழ்ந்த வாழ்க்கையின் அடையாளங்கள் இந்த மண்ணிடையே பதிவு செய்வதுவே, அவன் வாழ்வின் பயன்.

இப் பயனைத் தமது அறுபதாவது அகவையின் பூர்த்தியிலே அமைந்த சிந்தனை நிறைந்த அறநெறி விழுப்பங்களை, "வாழ்வாங்கு வாழ்வோம்" என்னும் தலைப்பில், காத்திரமான நூல் ஒன்றினை வெளியிடுவதற்கு அவரது உள்ளம் படிந்து நிற்கின்றது. இவரது அனுபவம், ஆழ்ந்த புலமை, அகப் பண்பு, குருபக்தி ஆகிய

அனைத்தும் இந்நூலிலே கனிந்த தமிழோடு, கலந்து வருகின்றது. சிறுகதை, குறும்பா முதலான நவீன இலக்கியங்கள் வளர்ந்து தமிழுக்கு வளமூட்டுவது பெருமையே யானாலும், காலத்தின் தேவை எது என்பதைத் தெரிந்துகொண்டால் "வாழ்வாங்கு வாழ்வோம்" என்ற நூலின் தகமை எல்லோருக்கும் புரியும். அடியேன் இவர்பால் அன்புகொண்டவன். இவர் என்பால் பெருமதிப்புக்கொண்ட பெருமகன்.

என் இல்லம் தேடிவந்து, அடியேனின் கண்மணி நூலகத்தில் உள்ள நூல்களைப் படித்துப் பயன் கெண்டவர். அம்மன் பக்தரான இத்தகு பெருமகனார், பல்லாண்டு காலம் நிறைவுபெற்று வாழவேண்டும். அன்னாரின் அன்புத் துணைவியார் கலைவாணி அவர்கள், இவருடைய உறுதுணையாக இருந்து நன்மக்களின் வளர்ச்சிப் பெருமையோடு வாழவேண்டும். சைவமும், தமிழும் இவரது நாடிநாளங்களில் ஊறித் திளைத்த எண்ணங்களே, உரம்போட்ட விதையாக, இவர் வாழும் சிந்தனை வாழும். அடியேனை ஆழும் அன்னை அன்னாரோடு உடனிருந்து வாழச்செய்வாளாக.

சிந்தை நிறைந்த சிந்தனையைத்
தெளிவால் மாந்தர் புரிந்திடவே
செந்தமிழ் தேனில் குழைத்தெடுத்து
தெவிட்டா அமுதாய் நமக்களித்தார்
எந்தன் அன்பில் கனிந்துநிதம்
இதயம் நிறைந்த பேராசான்
சந்ததம் காளி தன்னருளால்
தழைக்க நூறு பல்லாண்டு."

சுபம்

இங்ஙனம்

கண்மணிதாசன்

விஸ்வப் பிரம்மம் Y.E.S காந்தன் குருக்கள்

ஸ்ரீ முத்து விநாயகர், பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம குரு

பெரியபோரதீவு

என்னுரை

பிறப்புகளுள் மிக அபூர்வமானதும் *அதிசயமானதும்* மனிதப் பிறப்பே யாகும். ஆறு அறிவுடைய மனிதன் தனது பிறவியின் மகத்துவத்தை உணராமல், தம் புலன்கள் போன போக்கெல்லாம் குரங்கு மனங்கொண்டு, பிழையான வழிகளில் வாழ்ந்து, குறைந்த ஆயுளிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகிறான். ஒருவனுக்கு ஆயுள் நூறு என ஆருடம் கூறினாலும், பின்னரும் பல வருடங்கள் மனிதன் வாழவில்லையா? காரணம் என்ன? அவன் தம் வாழ்வில் உணவை மட்டுமன்றி, உடலையும் செவ்வையான முறையில் பேணிப் பாது காத்தமையே யாகும்.

ஒருவன் உயிர் வாழ்வதற்கு போசாக்கு மட்டுமன்றி இறையருளும் அவசியம் என்பது, விஞ்ஞானிகளாலும், ஆன்றோர்களாலும் அறியப்பட்ட உண்மை. இதை நினைந்தே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லுபாயங்கள் பலவற்றறைச் சேர்த்தும், என் உள்ளத்துறைந்துள்ள அரிய பல நூற்பாடல்களையும் தொகுத்து, ''**வாழ்வாங்கு வாழ்வோம்**'' என்ற தலைப்பில் எனது மணிவிழாவின் நினைவாக, இந் நூல்கள் தங்கள் கரங்களில் தவழ்கின்றன.

எனது அறுபதாவது அகவையில் என் மனத்திலுள்ள சில பயன்றரும் பாடல்களை நம் சமூகத்துக்குக் கொடுக்க நினைத்த வேளையில் முதலில் மகிழுவுடன் பாராட்டி ஊக்கம் அளித்ததோடு, ஆசியுரையும் வழங்கி ஆற்றுப்படுத்திய கலையின் சிகரம்; ஆத்மீக அருளாளர் ஸ்ரீலஸ்ரீ காந்தன் குருக்கள் ஐயா அவர்களை, யாண்டும் நீங்கா நினைவில் இருத்தி, இப் புத்தகத்தின் அறிமுக உரையாத்த வெற்றித் திருமகன் முன்னாள் தொலைக்கல்வி விரிவுரையாளர் திரு.மு.தம்பிப்பிள்ளை ஐயா அவர்களையும் என் நன்றிக்கடலுள் பத்திரப்படுத்துகிறேன். இங்கே நாம் கடைப்பிடிக்க வேண்டிய பல விடயங்கள் இரத்தினச் சுருக்கமாகத் தரப்படுகின்றன. அவற்றை நம் வாழ்வில் நாளுந் தலைக்கொண்டு, நீண்ட ஆயுள் பெற்று வாழ இறயருளை வேண்டி நிற்கிறேன். வாழ்க வளமுடன்.

திரு.தா.கோபாலகிருஷ்ணன் ஆசிரியர்
குமரன் வீதி, களுவாஞ்சிகுடி.

18.04.2016

வாழ்வாங்கு வாழ்வோம்

மானிட வாழ்க்கை என்பது, பிறவிகளுள் கிடைத்த உன்னதமான ஒன்றாகும். ஏனைய எல்லா விலங்குகளையும் வழிநடாத்தி, வெற்றிகண்டவன்தான் மனிதன். இப்பேற்பட்டவன் தன் வாழ்வில் வாழ்வாங்கு வாழலாம். ஆயினும் நல்லபடி வாழ முடியாமல், மனம் போனபோக்கில் தாம் விரும்பியபடி வாழ்ந்து, மண்ணோடு மண்ணாய்ப் போனவர் பலர். மிகச் சிலரே வாழ்வாங்கு வாழ்ந்து எடுத்த பிறவிப்பயனை அடைந்திருக்கிறார்கள். இவற்றுக்கு நல்லொழுக்கம் அவசியமாகும். நல்ல ஒழுக்கத்திலிருந்து தவறாதவர் எப்படிப்பட்டவர் என்பதை,

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்"

என ஆசாரக்கோவை கூறுகின்றது. எனவே இந்த எட்டுவகைச் சிறப்புகளையும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர்கள், சிறப்புடனே வாழ்வார்கள் என்பர். ஆனால் இதனைக் கடைப்பிடிக்கக் கூடியவர்கள் மிகச் சிலரே. அதிலும் மனித மனமோ, நாம் செய்த வினைக்கு ஏற்பவே பிறக்கிறோம் என்பதை மறந்து விடுகிறது. ஒன்றுக்கும் வழியில்லாதவன், எனக்கு ஒரு குடிசையாவது கிடைக்காதா? என ஏங்குகிறான். ஓலைக் குடிசையில் இருப்பவன், எனக்கொரு மண்வீடாவது கிடைக்காதா? என எண்ணுகிறான். மண் வீட்டில் உள்ளவன், எனக்கு ஒரு சிறிய கல்வீடாவது கிடைக்காதா எனக் கற்பனை பண்ணுகிறான். சிறிய கல்வீட்டில் உள்ளவன், எனக்கு ஒரு மாடி வீடுகட்ட முடியாதா? என மனக்கோட்டை பண்ணுகிறான். இது,

"பாலுக்குச் சர்க்கரை இல்லையென்
பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போட உப்பில்லை
யென்பார்க்கும் குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென்
பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென்
பார்க்கும் விசனமொன்றே".

என்ற பாடலுக்கு ஒப்ப உள்ளது. அதாவது குடிப்பதற்குப் பால் இருந்தும், சுவையைக் கூட்ட உப்பில்லையே என ஒருவன் வருந்துகிறான். வீதியில் நடக்க முடியாதவன், காலுக்குப் போடத் தோற் செருப்பாவது இல்லையே என நினைக்கிறான். பொற் சிவிகையில் பயணிக்கும் செல்வந்தன்கூட, தனக்குப்பஞ்சணை இல்லையே என வருந்துகிறான். எனவே அவரவர் நிலைக்கேற்ப வருத்தம் பெரிதாகத் தோன்றுகிறது. ஆசையின் தூண்டுதலால், மனிதன் அல்லும் பகலும் ஓய்வின்றி அலைகிறான்.

சிலர் நினைக்கலாம் மனிதன் பிறக்கிறான், மூப்படைகிறான், இறக்கிறான் இதுதான் வாழ்வு என்று. அவன் தன் வாழ்க்கையில் எதனைச் சாதித்தான்? என்பதே மேலானது. காலையில் எழுந்து காலைக் கடமைகளைச் செய்து, தாய் தந்தையரை வணங்கி, அன்றைய தினம் செய்ய வேண்டிய கருமங்களை நினைக்கவேண்டும். இதனால் அவனது வாழ்வு சிறப்படையும் இதனை,

"வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயும் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை"

என ஆசாரக்கோவை அழகாக எடுத்துக் கூறுகிறது. இதுபோல் மூத்தோர் பெரியோரது வழிகாட்டலோடும், ஆன்மீக வாழ்வுடனும், மனித நேயத்தோடும் வாழ்ந்து, உத்தமராகத் தம் மானிடப் பயணத்தை முடித்து இருக்கிறார்கள். இன்னும் சிலர் குழந்தைப் பருவம்வரை கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து, தம் காலில் நிற்க வழிகிடைத்தும், அவர்கள் விரும்பியபடியே வாழ்ந்து சிறுபட்டியாகித் திரிகின்றனர். விவேகசிந்தாமணி ஆசிரியரும் இதனை,

பிள்ளைதன் வயதில் மூத்தால்
பிதாவின்சொற் புத்தி கேளான்
கள்ளின்நல் குழலாள் மூத்தால்
கணவனைத் திரும்பிப் பாராள்
தெள்ளற வித்தை கற்றால்
சீடனுங் குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால்
உலகோர்பண் டிதரைத் தேடார்

எனக் கூறுகிறார். அதாவது மைந்தன் வயதில் முதிர்ந்தால், தன் தந்தையின் புத்தியைக் கேட்க மாட்டான். ஆடவனிலும் வயது மூத்த பெண்டு, கிழப்பருவம் அடைந்தால், மதிப்புடன் நினைந்து கணவனுக்குப் பணிவிடை செய்யமாட்டாள். குற்றமறத் தெளிவாகக் கல்வியைக் கற்றுவிட்டால், மாணவனும் தன் ஆசிரியனைத் தேடமாட்டான். இவ்வுலகிலுள்ளவர் தமக்குரிய நோய் தீர்ந்து விட்டால், மருத்துவரைத் தேடமாட்டார்கள். எனவே நாம் ஒவ்வொருவரும் மேற் கூறிய தந்தை முதலானவர்களை மதித்து நடந்தால், வாழ்வு சிறக்கும். இதனை எல்லோரும் நினைப்பது குறைவு. இதனால் மிகவும் துன்பமடைந்து, இறுதியில் வாழ வேண்டிய வயதில் வீணாய் மடிந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தாய், குழந்தையைப் பெற்று வளர்ப்பது தம் வாழ்வில் தம் தந்தையின் இறுதிக் காலம்வரை கடமைகளை ஒழுங்குறச் செய்வதற்கேயாகும் என்பதை,

"மைந்த ரைப்பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்பன
அந்த மாம்கடன் ஆற்றுதற் கேயன்றோ"

என்ற விவேகசிந்தாமணிப் பாடல் பறைசாற்றி நிற்கின்றது. தாயின் அரவணைப்பில் குழந்தை வாழும்போது, அன்பு, பாசம், கருணை யாவற்றிலும் திளைத்து இன்புற்று வாழ்கிறது. ஆனால் தாய் தந்தையரின் அரவணைப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் அக்குழந்தை நெறிபிறழ்ந்தும், தாம் விரும்பிய போக்கிலேயே வாழ்கின்றது. இதனால் அது திசை மாறிப்போவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இதற்கு நம் அருஞ் செல்வங்களான மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய நான்மணிகளது அனுக்கிரகங்களும் அவசியமானவையாகும்.

நான் மணிகள்

மாதா

நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய முதற் தெய்வம் தாயாவாள். நாம் பிறந்து, முதலில் கண்டது தாயைத்தான். இப்பேற்பட்ட நடமாடும் தெய்வத்துக்கு நிகர், வேறு ஒன்றுமில்லை. இதனால் அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை; தாயில் சிறந்ததொரு கோவிலுமில்லை; தாய்க்கு நிகர் உலகில் ஒன்றும் இல்லை... என்றெல்லாம் முன்னோர் கூறுவர். நாம் கருவில் இருக்கும்போது, நமக்காகப் பல நாள்கள் அவள் உணவு இன்றிப் பத்தியமாய்க் கண்விழித்து இருந்திருப்பாள். நமக்கு ஒன்றும் ஆகிவிடக்கூடாது என்பதற்காக எத்தனையோ நாள்கள் வைத்தியரையும், விசேட வைத்தியரையும் நாடியிருப்பாள்.

நாம் பிறந்ததிலிருந்து, அன்போடு அரவணைத்து முத்தமிட்டு கண்போலக் காத்திருப்பாள். "என்னைக் கலிதீர்த்தே உலகில் ஏற்றம் புரியவந்தாய்" என்ற பாரதியின் கூற்றுக்கு ஒப்ப, கண்ணை இமை காப்பது போலக் காத்து வந்திருப்பாள். எதில் வெற்றி பெற்றாலும் என்ர பிள்ளை; என்ர பிள்ளை என்று சொந்தம் கொண்டாடி யிருப்பாள். சான்றோன் எனக் கேட்ட போது, ஈன்ற பொழுதில் பெற்ற உவகையை விடப் பெரிதுவந்து கொண்டாடியிருப்பாள். ஆனால் பிள்ளைகளுள் அநேகர் "பிள்ளை மனம் கல்லு" என்பதுபோல, தாய் தந்தையரை மதிக்காது வாழ்கின்றனர். தாய் இல்லாமல் நான் இல்லை என்ற மந்திரத்தை அறிந்தால், நாம் எப்போதும் அவர்களை மறக்க மாட்டோம். முதியோர் இல்லங்களில் வாழ விடமாட்டோம்.

பிதா:-

நாம் கண்டுகொண்ட இரண்டாவது தெய்வம் தந்தையே யாகும். அன்புக்குத் தாய் என்றால், அறிவுக்குத் தந்தையாகும். நாம் பிறந்ததிலிருந்து தோளிலும் மார்பிலும் சுமந்து விளையாடி; தாம் விரும்பிய இடங்களுக்கெல்லாம் கொண்டுசென்று, எங்களைச் சந்தோஷப் படுத்தி இருப்பார். இறுதியாக

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்பதற்கிணங்க கல்வியில் சான்றோன் ஆக்கிக் களிபேருவகை அடைகிறார். இதுபோல் புதல்வனும்

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்பதற்கு ஒப்ப தந்தைக்குப் பேரெடுத்துக் கொடுக்கிறான். ஆனால் இன்று சிலர் இதற்கு எதிர்மாறாகவும் உள்ளனர். இதற்கு ஒரு சிறிய கதையுமுண்டு.

ஒரு தந்தை, வயது முதிர்ந்த தனது தந்தைக்கு நாளாந்தம் உணவு கொடுக்க ஒரு அழுக்கடைந்த பாத்திரமும், குவளையும் வைத்திருந்தான். உரிய வேளைக்கு அப் பாத்திரத்தில் உணவு கொடுத்து வரும்போது, ஒருநாள் அவ்விரு பாத்திரங்களையும் காணாமையால், தன் மகனை அதட்டினான். அதற்கு மகன் கூறினான். "அப்பா தாத்தா இப்போது உணவின்றிச் சாகக் கிடக்கிறாரல்லவா? அதை இப்போது பத்திரப் படுத்தினால்தான், உங்களுக்கும் பின்பு ஒரு நேரத்தில் நான் தருவேன்" என்றான். அப்போதுதான் தகப்பனுக்கு இவ்வளவு காலமும் நான் என் தந்தைக்குச் செய்தது, துரோகம் என்பது புரிந்தது. இப்பேற் பட்டவர்கள் சிலர் இன்றும் இருக்கிறார்கள். ஏன் தனது தந்தை அடிக்கடி மலசலம் கழிக்கிறார் என்று, அவரை நாய்க் கூட்டில் அடைத்தும், நாயை மெத்தையில் இட்டும் வைத்து இருந்ததைப் பத்திரிகையில் நாம் படித்திருக்கிறோமல்லவா?. அவர்கள் தாய் தந்தையர்களின் பெருமையை அறிந்தால், இறுதிவரை அவர்களைப் பேணிமப் பாதுகாத்துப் பயனடையலாம்.

குரு :-

குரு என்பதன் பொருள், அஞ்ஞானத்தைப் போக்கி அறிவியல் ஞானத்தைக் கொடுப்பவர் என்பதாகும். மாதா, பிதா ஆகிய இரு தெய்வங்களுக்கும் அடுத்தபடியாக வைத்து எண்ணப் படுபவர் குரு ஆவார். குருவில்லா வித்தை பாழ் என்பர். ஐந்து வயதுவரை பெற்றாரின் அரவணைப்பில் இருந்த குழந்தை, ஆறு வயதிலிருந்து ஆசிரியனின் அறிவுப் பாதையில் பிரவேசிக்கச் செய்கிறது. அதனால் எதிர் காலத்தில் சமுதாயத்திற்கு ஏற்ற ஒரு நற் பிரஜையாக உருவாகிறது. தாகம் ஏற்பட்டபோது நாம் கடல்நீரைப் பருக நினைத்தால் அது தாகத்தைத் தீர்க்காது. அருகில் ஒரு பூவலைத் தோண்டி அதிலிருந்து ஒரு குவளை நீரைப்பருகினாலேயே, அது தாகத்தைத் தீர்த்து விடும். அதுபோலவே குரு சந்தேங்களை நீக்கி நல்லறிவைப் புகட்டி நன்னெறி காட்டுவார். இதனாற்றான்

"மந்திரமும் தேவும் மருந்துங் குருவருளும்

தந்திரமும் ஞானத் திருவருளும் - செந்திருவும்

மெய்யெனில் மெய்யாய் விளங்குமே மேதினியில்

பொய்யெனில் பொய்யாய்ப் போம்."

என்ற பாடல் குரு, அவரது உபாயம், குருவருள், இறைவன் திருமுறைப் பாடல்கள், மருந்து முதலிய யாவும் உண்மைப் பொருள்களாகவிருந்து சுகமளிப்பவை. அவை பொய் என நினைத்தால், அவர்களுக்குப் பொய்யாகவே மாறி எதிர் காலத்தில் துன்பத்தையும் ஏற்படுத்தும்.

தெய்வம் :-

ஒருவன் இறை சிந்தனை உடையவனாக இருப்பானாயின், அவன் ஆன்மீக உணர்வு வரப்பெற்றுத் தன்னைப்போலப் பிற உயிர்களையும் நேசிக்க நினைப்பான். எந்தச் செயலும் இறைவன் கட்டளைப்படியே நடை பெறுகிறது உடல் உழைப்புக்கேற்பவே ஊதியமும் கிடைக்கிறது என்பதைத்

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்

மெய்வருந்தக் கூலி தரும்"

என்பதைத் திருவள்ளுவரும் கூற விழைகிறார். இதுபோல் எங்கள் சக்திக்கு மேலாக இறைவன் இருக்கிறார். அவர் எங்கும் இருக்கிறார் என ஆத்திகர்கள் கூறுவர். கடவுள் இல்லை என நாத்திகர்கள் கூறினாலும், ஈற்றில் எமக்கு மேல் ஒரு சக்தி உண்டு என்பதை அவர்களாலும் உணரவே முடிகிறது. சில பக்தர்கள், அப்பன் நீ அம்மைநீ.. என அப்படியே லயித்தும் வாழ்கிறார்கள். துறவிகள் தியானத்தில் இருந்து இறைவனைக் காணுகிறார்கள். கடவுளைத் தொழுவதற்கும் நேரம், முறை எனவும் வகுத்திருக்கினறார்கள்.

"நாளந்தி கோல்தின்று கண்கழீஇத் தெய்வத்தைத்

தானறியும் ஆற்றல் தொழுதெழுக அல்அந்தி

நின்று தொழுதல் பழி".

அதாவது அதி காலையிலெழுந்து, குச்சியால் பல்துலக்கி, கண், முகம் கழுவி, இறைவனை வழிபடவேண்டும். அந்திப்பொழுதில் நின்றபடியே தொழுதல் கூடாது. இதுபோல் இல்லற வாழக்கையில் உள்ளவர்கள் தமது சக்திக்கு மீறித் தியானம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்வதால், உடலை வருத்திக் கொள்ள நேரிடும். அதாவது, நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு; உடல் நலம் பாதிக்கப்படும். இலௌகிக வாழ்க்கையில் உள்ளவர் தியானம் செய்வதாயின், இரவில் போதிய ஓய்வும், ஆழ்ந்த நித்திரையும் அவசியம். அதனால் தான், சீரிய வாழ்கையைச் சிறப்பாக வாழவேண்டும் என நினைப்பதோடு; எனது வாழ்வில் நான் ஒரு முன்மாதிரியாகத் திகழவேண்டும் என்றெல்லாம், தன் வாழ்க்கையைத் திட்டமிட வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் அவன் உயர்கல்வி பெற்று, வீட்டுக்கும் நாட்டுக்கும் உத்தமனாக வாழ வழிகிடைக்கின்றது. ஆயினும் அவனுக்கு அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் முக்கியம் பெறுகின்றன.

அடிப்படைத்தேவைகள் :

உணவு :

உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமானது. உணவினாலானதே உடம்பு. இதனைக் கணியன் பூங்குன்றன், "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்றார். அக்காலத்தில் உணவு சமைக்கும் நூல், ''மடைநூல்" என அழைக்கப் பட்டது. இது பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை முதலிய நூல்களில் கூறப்படுகின்றன. காலத்துக்கு ஏற்ற உணவுகளையும், நிலம், சாதி முதலியவற்றுக்கு ஏற்ற உணவுகளையும் அந் நூல்களால் அறிந்து கொள்ளலாம். சீவகசிந்தாமணியில் முத்தி இலம்பகத்தில் "இருதுநுகர்வு" என்னும் பகுதியில், பெரும் பொழுதுக்குரிய சில உணவுகள் கூறப்படுகின்றன. அது நிறை உணவாகவோ, நிறையில் உணவாகவோ இருக்கலாம். அதனை எந்தவகையில் பெற்று; எவ்வாறு உண்ண வேண்டும் என்பது முக்கியமாகும். அதாவது, தம் முயற்சியினால் மெய்வருந்தக் கிடைத்த கூலியைக் கொண்டு உண்பது, நீதியானதும், கௌரவமானதும், மேலானதுமாகும்.

விவசாயமாக இருந்தால் என்ன, அரச தொழிலாக இருந்தாலென்ன. அவனது உழைப்பில் வாழ்வதே உத்தமம். தாம் உழைத்துக் கொண்டு மற்றவரிடம் யாசித்து வாழ்வதும், தன் சோறிருக்கத் தாய்சோறு உண்பதும் அதமம் என்கின்றனர் முன்னோர்கள். இன்னும் சிலர், தாம் தேடிய செல்வங்களைப் பதுக்கி வைத்துக் கொண்டும்; சிலர் பிழையான வழியில் தேடிய பணத்தைக் கொண்டு, அதிக வட்டிக்குக் கொடுத்தும்; பல மடங்காகச் சேர்க்கின்றனர். இன்னும் சிலர், நேரிய வழியில் உழைத்த பணத்தைச் சகோதரம், குடும்பம் ஆகியோர் பட்டினியாயிருக்க, அதனைச் சிந்திக்காமல் நண்பர்களுடன் சேர்ந்து; மனம் போன போக்கில் குடித்தும் பிழையான வழியில் செலவு செய்கிறார்கள். அவ்வாறன்றி, நாம் நம்மிடம் உள்ளன கொடுத்து இட்டு உண்டு வாழ்ந்தால், உலகோர் மதிப்பர்.

எனவே நாம் நல்லவர்களோடு பழகினால் நல்ல எண்ணம் கொண்டவர்களாகவும்; நன்மை செய்பவர்களாகவும்,

தீயவர்களுடன் சேர்ந்தால் தீயவர்களாகவும்; கெட்ட உள்ளம் கொண்டவர்களாகவும் மாறுவோம். இதனை ஔவையார்,

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று" எனவும்

"தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே யவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது"

எனவும் நல்லுபாயம் கூறுகிறார். "மருந்தாயினும் விருந்தோடு உண்" என்பதற்கு ஏற்ப, ஒருவர் மற்றவரது வீட்டுக்குச் சென்றாலும், அவரது நிலைமைக்கு ஏற்ப பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். அவரது நிலைமைக்கு மிஞ்சி யாசிப்பதோ; மதுவருந்த நினைப்பதோ, தவறு.

"மான அருங்கலம் நீக்கி யிரவென்னும்
ஈனஇழிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்த் திவ்வுடம்பு
நீடித்து நிற்கும் எனில்"

என நாலடியார் கூறுகிறார். அதாவது, "இரந்து உண்ணல் போன்ற இழிவான தொழில்களால் வலிமை பொருந்தி இவ்வுடல் நீடித்து நிற்குமானால், மானம் என்கின்ற அரிய ஆபரணத்தையும் நீக்கிவிட்டு, யாசகம் என்ற மிக ஈனமான செய்கையால் உயிர் வாழ்வேன்" என்று அழகாகச் சாடுகிறார். இரவாமை பற்றித் திருவள்ளுவரும், முகம்மது நபி பெருமானாரும் கண்டிப்பாக வலியுறுத்துகிறார். இந் நற்பண்பு எல்லோரது உள்ளங்களையும் சந்தோசத்தில் ஆழ்த்துமல்லவா?

இந்துக்கள் பண்டிகை முடிந்து மற்றையவர்களது வீட்டுக்குச் சென்றால், முதலில் நாள்பார்த்தே எதுவும் உண்பார்கள்.

சில நாள்களை அவர்கள் ஒதுக்கி விடுவார்கள். வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை என்பனவே அவையாகும் இதனை,

"வெள்ளி சனிதிங்கள் விருந்துண் புதனாகும்
கள்ள வியாழன் கசப்பாகும் - தெள்ளுகதிர்
தீராப் பகைகாட்டும் செவ்வாய் தனக்குமோர்
வாராப் பழியுந் தரும்".

என "வாழ்வின் ஒளி" என்ற நூல் கூறுகிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் கட்டாயம் உண்ண நேர்ந்தால், அதற்குப் பரிகாரமும் உண்டு.

"செவ்வாய்க்குப் பாலாம் தினகரர்க்கு நெய்யாகும்
மெய்யாம் வியாழன் வெந்நீராம் - ஐயகேள்
இந்நா ளொருவிருந்தை இட்டிட வேண்டிலோ
சொன்னோம் பரிகாரந் தான்".

என்று கூறி, மகிழ்வான வாழ்க்கைக்கு வழிகாட்டப் படுகிறது. இதனை விரும்பிக் கடைப்பிடிக்கும் பாமர மக்கள், இன்றும் அநேகர் உள்ளனர். ஆயினும், ஒருவருக்கு உண்ணவேண்டிய ஊட்டச் சத்துகளுள், கொழுப்பு முதலானவை மிக முக்கியமாயிருப்பினும், அவை அளவோடு உண்ணப்பட வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பர். இன்று யாவரும் வாழ்க்கைத் தரத்திலும்; நாகரிகத்திலும் உயர்ந்து விட்டதால், வீட்டிலும் ஏனைய இடங்களிலும் சாதாரண உணவன்றி, புறியாணிச் சாப்பாடும், சோடாவுமே வழங்கப்படுகிறது. சாப்பாட்டிலுள்ள அதிக கொலஸ்றோல் அல்லது கொழுப்பு; உயர் குருதி அமுக்கத்தையும், அத்தோடு நீரழிவு நோயையும் கொண்டுவரும் என்பதைக் கற்றவரன்றி, மற்றவர் அறியார். இதுபோல் கிழங்கு, மிக்சர் என்பவற்றோடு, பிளாஸ்ரிக் பொருட்களையும் எண்ணெயுடன் சேர்த்துக் கள்ளத்தனமாகப் பொரிக்கிறார்கள். இதுபோல் பிளாஸ்ரிக் றைஸ்(plastic rice) என்பது, மரவள்ளிக் கிழங்குடன் பிளாஸ்ரிக் கலவை சேர்ந்த அரிசி என்பர். இதை யார் அறிவார்? இது அவை கெடாமலும் மினுமினுப்பாகவும் ஏன்? சுவையாகவும் இருப்பதால், அவற்றை பாமர மக்கள் உண்டு சுவைக்கின்றார்கள். இரசாயன

மருந்து ஊட்டப்பட்ட புறொயிலர்க் கோழியை உண்டு சுவைக்கிறார்கள். எல்லா மரக்கறிகளையும் பொரித்து உண்கிறார்கள்.

சுருங்கக் கூறின் இக்காலத்தில் "எண்ணெய் இல்லாமல் உணவு இல்லை" என்றே கூறத் தோன்றுகிறது. இதனால் அவர்கள் வாழும் வயதில் பல்வேறு கொடிய நோய்களாலும், இருதய "வால்வ்" சத்திரசிகிச்சைக்கு உள்ளாகியும் மரணிக்கவேண்டி ஏற்படுகிறது. எனவே இதனை மனதிற் கொண்டு பல்வேறுபட்ட இயற்கை மரக்கறி வகைகளையும்; நார்த்தன்மை கொண்ட உணவு வகைகளையும்; மதிய உணவில் சிவப்பரிசிக் சோற்றையும்; உணவில் சேர்த்துக் கொள்வதோடு, காலையிலும் மாலையிலும் உடற்பயிற்சிகள் செய்து வந்தால், நீரிழிவு நோய் முதலான எந்த நோயுமின்றி, நாம் நீண்டகாலம் வாழ முடியும். ஆயினும் சிலவற்றை இரவில் உண்ணக் கூடாது என விவேக சிந்தாமணி என்ற நூலில் குறிப்பிடப்படுகிறது.

"இஞ்சி நெல்லி இலைக்கறி காய்வகை
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடில்
பொஞ்சு பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சிக் குலவி நடிப்பளே".

எனக் கூறுகிறது. இவற்றை இரவில் உண்பதால் மூதேவி உறைவாள் எனப் பலநூறு வருடங்களுக்கு முன்பு இப்பாடல் கூறியிருப்பினும், இன்று இதற்குப் பல விஞ்ஞான விளக்கங்களும் கூறப்படுகின்றன. உண்ணும் போது முதலில் இனிப்பானவற்றையும், ஈற்றில் கசப்பானவற்றையும் உண்ணவேண்டும் என்பதை,

"கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்தன இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்".

என்ற பாடல் கூறுகிறது. இவற்றைக் கடைப்பிடிப்பது எமக்கு மேன்மையைக் கொடுக்கும். இது மட்டுமன்றி, இக்காலத்தில் சில உணவுகள் ஒவ்வாமையாகக் காணப் படுகின்றன. மரவள்ளிக் கிழங்கிற்கு, இஞ்சி சேர்த்த சம்பல் அக்காலத்தில் உண்டனர். ஆனால் இன்று இது நஞ்சாகி விடுகிறது. கொக்காக் கோலாச் சோடாவுடன் பலாப்பழம் ஒவ்வாமையாகிறது. இதுபோல் நாம் உண்ணும்

உணவுகள் கூட, நாளுக்கு நாள் ஒன்றுக்கொன்று ஒவ்வாமைக்கும் இடமளிக்கின்றது. இதுபோல் பல உணவுகள் சேரும்போது, ஒவ்வாமையாவதை நாம் அறிந்திருக்க வேண்டியுள்ளது. இருப்பினும் இன்று எல்லாப் பயிர்களுக்கும் கடுமையான இரசாயன எண்ணெய் விசிறப்படுவதாலும்; மக்களுக்கு அதிக தீங்கு விளைகிறது. இவற்றை இரசாயன மருந்தின்றி இயற்கையாகச் செய்து உண்டால் நோய் அணுகாது. நம் நாட்டவர், நெல்லரிசிச் சோற்றையே பிரதான உணவாகக் கொள்வர் ஔவையார் கூட,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும் - திரமுடனே
புல்வேழூர்ப் பூதன் புகழ்ந்துவரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்".

என அன்று புகழ்நது பாடினார். ஆனால் அவ்வியற்கை உணவைப் போலன்றி, இன்று எல்லாவற்றையும் கவனித்தே உண்ண வேண்டும். அதனை "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது போல அளவோடு உண்ண வேண்டும். அதுவும்

நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பார்தம்

பேருரைக்கிற் போமே பிணி.

என்பது உண்மைதான். உணவு உண்ணும்போது,

கிழக்குப்பக்கம் நோக்கி உணவு உண்டால் ஆயுள் பெருகும், செல்வம் அதிகரிக்கும்.

தெற்குத்திசை நோக்கி உண்டால், மற்றவரால் புகழ் கிடைக்கும்.

மேற்குத்திசை நோக்கி உணவருந்தினால், நன்மை கிடைக்கும் கடவுளின் சக்தி உண்டு.

வடக்குத்திசை நோக்கி உண்டால், வாழ்க்கை சீரழியும். இதனை

"உத்தமம் கிழக்கு

ஓங்குயிர் மேற்கு

மத்திமம் மேற்கு

மரணம் வடக்கு"

என நாட்டுப்புற மக்கள் கூறுகின்றனர்.

உண்ணும்போது பாயில் இருந்துகொண்டு; இறை சிந்தனையுடன் மற்றவருடன் பேசாது உண்ண வேண்டும். உணவு அருந்திக்கொண்டு ஒருவரை வழியனுப்புதல் கூடாது. என்ற பண்பாடும் நம்மவரிடம் உண்டு.

உடை:

மானத்தைக் காக்க உதவுவது உடை. "ஆடை இல்லாதவன் அரை மனிதன்" என்பார்கள். ஆதி மனிதர் இலை குழைகளையும்; மரப் பட்டைகளையும் அணிந்து, பின்பு கைத்தறி நெசவு செய்து, பதினாறு முழச் சாறி அணிந்து மதிப்புடன் வாழ்ந்தனர். அக் காலத்தில் மிருதுவான ஆடைகளையும் அணிந்திருந்தனர் என்பது,

"இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்"
என மலைபடுகடாம் என்ற நூலிலும்

"இழையணி வாரா வொண்பூங் கலிங்கம்"

என புறநாநூற்றிலும் கூறப்படுகின்றன. ஆனால் இன்று பெண்கள் அணியும் ஆடையின் அளவானது முழம்போய்ச் சாணாகும் காலம் என வாட்டி வதைக்கிறது. இது நாகரிகத்தின் மோகமா? அன்றி ஊடகங்களின் தாக்கமா? என்பதை வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். வெள்ளையரின் நாகரிகம் நம் நாட்டில் புகுந்ததால் அம்பலத்தில் ஆடும் அழகிகூட, ஆடையைக் களைந்தெறிந்து ஆடும் அளவுக்கு சிங்களச் சமூகத்துள் நாகரிகம் வளர்ந்துவிட்டது. இதை ஊடகங்களிலும் கூடக் கண்டிருப்பீர்கள். இது பாலர் முதல் விருத்தர் வரை அணிகலன்களிலும் , பாவனைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். இது நம் கலாசாரத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும்.

ஒருபெரியவரைக் கௌரவிக்கும்போது, பொன்னாடை போர்த்துவர். வருடப்பிறப்பை ஒட்டி; பெற்றார், பெரியோர், மூத்தவர்கள் ஆகியோருக்கு வேட்டி, சால்வை, சேட், என்பவற்றையும், பெண்களாயின் புடைவை முதலியவற்றையும் கொடுத்து ஆசீர்வதிக்கப் பெறுவர். இது நம் பண்பாடு. கோடி உடுப்பதற்கு நாள் பார்ப்பது, இந்துக்களிடையே கட்டாய வழக்கமாக இருந்து வருகிறது. வியாழன், வெள்ளிக் கிழமைகளே நல்லநாள் எனப் பெரியோர் கூறுவர். வருடப்பிறப்பன்று பொருத்தமில்லாத தினமாயின், அதற்கு முதலிலேயே உடுத்திப் பார்த்துவிடுவர். இதனை,

"காரியில் அழுக்க தாகும்
கதிரவன் பீடைகாட்டும்
மாரியில் நனையுந் திங்கள்
வன்புதன் பீடைகாட்டும்
வீரிய மில்லைச் செவ்வாய்
வெள்ளியில் மடந்தைசேர்வாள்
கூரிய வியாழன் நன்றே
குலவிய ஆடைசாற்ற"

(காரி - சனிக்கிழமை)

(கதிரவன் - ஞாயிறு)

என்ற பாடல் பறைசாற்றுகிறது. இக்கொள்கைகள் இன்றும் கிராமப் புறங்களில் கடைப்பிடிக்கப் படுகின்றன. இதனால் நோயின்றி நீண்டகாலம் வாழலாம் என்பது அவர்களது கொள்கையாகும்.

உறையுள்:-

ஏழையாயினும்; பணக்காரனாயினும் நிம்மதியாக வாழ்வதற்கு ஒரு வீடு அவசியம். இவ் வீடு அல்லது மனை எவ்வாறு அமையவேண்டும் என்பது "பெரும்பெயர் மன்னர்க்கொப்ப மனைவகுத்து" என்ற தொடர் மூலம் நெடுநல்வாடை என்ற நூல் அவரவர்க்கேற்ப, மனைகள், அறைகள் காலதர் (காற்றுப் புகும்வழி), கோபுரங்கள், நிலாமுற்றம் என்பன அமையவேண்டும் என்பது பற்றி அழகாகக் கூறுகின்றது. இதன்படி வாழ்ந்தால், துன்பமின்றிச் சகல சௌபாக்கியங்களுடனும் சிறப்பாக வாழலாம் என மனையடி சாஸ்திரம் கூறுகிறது.

அதாவது தரையானது, சற்சதுரமாகவன்றிச் செவ்வகமான காணியாக இருப்பது நன்று. சமதரையாகவும் , மேற்கிலிருந்து கிழக்காக அல்லது தெற்கிலிருந்து வடக்காக மெல்லிய சாய்வானதாகவும் இருக்கவேண்டும். வீடும் அகலத்தை விட நீளமானதாக இருக்கவேண்டும். வளவின் நான்கு எல்லையிலும் எட்டிலொரு பங்கு, பூத நிலையத்துக்கென்று விடப்பட வேண்டும். சிலர் வேலியுடன் சேர்த்து, வீட்டின் சுவரை அமைப்பதைக் கட்டாயம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வீடு பாதையைவிட உயர்ந்த தளத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை

வீதி உயர்வாகி வீடதுவே தாழ்வானால்

பேதமையில் வாழ்தல் பிசகாகும் - ஊதியம்

போய்விடும் நோய்கிருமி புக்கிப் பெருகுவர்

பாழாகு மேமனையும் பார்

என இரத்தின சேகரம் என்ற சோதிட நூல் எடுத்துக் கூறுகிறது. குடிசைக்குக் கால் நாட்டும் போதோ, வீட்டுக்குக் கல் வைக்கும் போதோ, பாடவாரி நாள்; தலையற்ற நாள்; உடலற்ற நாள்; வாஸ்து தேவன் எழுந்திருக்கும் நாள்; தாம்பூலம் அருந்தும் நாள்; படுபட்சிநாள் அதுவும் பட்சி என்ன தொழில் நடத்துகின்றது? மரணயோகமா அல்லது சகடயோகமா? என்பன பார்ப்பது அவசியம்.

ஆனால் இன்று சில சோதிடர்கள், உரியவருக்குரிய படுபட்சியோ, யோகமோ பார்க்காமல் எழுந்தமான முறையில் நாள் எடுத்துக் கொடுப்பதால், மனையில் வாழ்பவர்கள் மிகவும் துன்பத்தை அனுபவித்துப் பாதிப்புக்கு உள்ளாகவும் வேண்டி ஏற்படுகிறது. இதுபோல் கிணறு அமைக்கும் முறைபற்றிக் கூபநூல் கூறுகிறது

பாடவாரி நாள்கள்:

திருவாதிரை, பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை ஆகிய நட்சத்திரங்களாகும். இந்நாட்களில் மனைகள் கட்டினால், கைப்பொருள் நாசமாகும், சுற்றத்தாருடன் பகைகள் ஏற்படும்.

தலையற்ற நாள்கள்:

மீருகசீரிடம், சித்திரை, அவிட்டம் என்பன தலையற்ற நட்சத்திரங்களாகும்.

உடலற்ற நாள்கள்:

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் உடலற்ற நட்சத்திரங்களாகும்.

காலற்ற நாள்கள்:

கார்த்திகை, உத்தரம், உத்தராடம் ஆகிய நட்சதத்திரங்கள் உடலற்ற நாள்களாகும். மேற்கூறிய நட்சத்திரங்களைத் தவிர்த்துக் கொள்வது நன்மை பயர்க்கும்.

இதுபோல் இன்ன நாளில் இன்ன நட்சத்திரம் சேரும் போது துன்பம் ஏற்படும் எனக் கூறப்படுகிறது. ஆதலால் இப்பேற்பட்ட தினங்களைக் கருத்தில் கொள்வது நல்லது. தற்போது இவற்றை யாரும் கடைப் பிடிக்கிறார்களா? அவ்வாறு கடைப்பிடித்தால், மனையில் வாழும் காலம்வரை எவருக்கும் இன்னல் ஏற்படாது. அத்தோடு, மாதங்களையும் அவதானிக்க வேண்டும். சித்திரை,

வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி முதலான மாதங்கள் நன்று என்பதை

"சித்திரைவை காசி யாடி
சிறந்தவா வணியி னோடு
வைத்தவைப் பசியும் மிக்க
மன்னுகார்த் திகையுந் தானும்
மற்றதை மாதத் தோடு
மாசிதா னெட்டு மாகும்
புத்தியால் மனைகள் கோலப்
புகழுடன் நன்மை யாமே"

என மயனால் எழுதப்பட்ட சிற்பரத் நாகரம் என்ற வாஸ்து நூல் கூறுகிறது. இதுபோல் வீடு குடிபுகும் போதும், நாம் நல்ல நாள் பார்த்தே புக வேண்டும். பஞ்சாங்களில் நாள்கள் போடப்பட்டிருப்பினும் தை, சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்கள் நன்மை பயக்கும் என்பர். இந் நாள்களைக் கட்டாயம் கடைப்பிடித்தால், கெட்ட தேவதைகள் அணுகாமல் நீடுழி வாழலாம் என்பது ஆன்றோர் வாக்கு

"ஆடித் திங்களில் ராவணன் பட்டதா
மாலித்தே பெரும் பாரதம் மார்கழி
வீடிட் டான்புரட் டாதி இரணியன்
மேவி யீசன் நஞ்சுண்டான் மாசியில்
பாடிக் காமன் எரிந்தது பங்குனி
பார்க்குள் ளேகினன் மாபலி ஆனியில்
வீடு இல்லம் குடிபுக வேண்டினோர்
ஓடிட் டேயிரந் துண்ப ருலகிலே".

என்ற இரத்தின சேகரப் பாடலில் ஆடி, மார்கழி, புரட்டாதி, மாசி, பங்குனி, ஆனி முதலான மாதங்கள் குடிபுகுவதற்கு ஆகாத மாதங்களாகும் என்பர். இத்துடன் "ஆனியில்

கூனியும் குடிபுகாது" என்பன போன்ற நாட்டுப்புறப் பழ மொழிகளும் நம் வழக்கில் நிலவுவதைக் காணலாம். இதனை முன்னோர் கடைப்பிடித்ததைப் போல இப்போது யாரும் கடைப்பிடிக்கிறார்களா? பாமர மக்களுக்கு என்ன தெரியும்?. பஞ்சாங்கங்களில் நாள்கள் போடப் பட்டிருந்தால் நாள் எடுத்துக் கொடுப்பவர்களும்; இதனைச் சிந்தியாமல் எடுக்கிறார்கள். அதனாற்றான் , இவற்றை நீங்கள் படித்தவர்களிடம் சரியாகக் கேட்டு அதனைக் கடைப்பிடிப்பதற்காக இவற்றைத் தேடிப் பெற்றுத் தருகிறோம்.

ஒருவன் பாடுபட்டு உழைத்துக் கொண்டுவரும் பொருட்களைச் சமைத்து, உணவாக்கி உண்டு நிம்மதியாக வாழ்வதற்கு, மனையினுடைய அமைப்பும், சமையலறை அமையும் இடமும் மிக அவசியமாகும். சுருங்கக் கூறின் ஒரு வீடு, கிழக்குப் பார்த்த விருச்சிக நிலையமாகவும், வடக்குப்பார்த்த சிங்க நிலையமாகவும் அமைவது நன்று. தெற்குப் பார்த்த கும்பத்து நிலையமாயின், ஈரறையில் மட்டுமே கட்டுவது ஓரளவு நற்பலனைக் கொடுக்கும். மேற்குப் பார்த்த இடபத்து நிலைய வீட்டில் வாழ்பவர்களுக்கு நோய்களும், கஷ்ரமும் ஏற்படலாம் என்பதை,

"அனலுறுந் தெற்குமேற்கு
அறைந்தனர் ஆகாதென்று
கனலுறு மயனார் தாமும்
கருணையில் கூறினாரே"..

என மயனால் கூறப்பட்ட பாடலடிகளை இரத்தினசேகரம் எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும்; இன்ன இன்ன திசை பொருத்தம் எனக் கூறினாலும், மேற்குத் திசையை நிச்சயம் தவிர்ப்பது நன்று என்பது அனுபவத் தேடலாகும். இவ்வாறு ஆரம்பத்தில் கட்டப்பட்ட வீடுகளுக்கு, வாசலை மாற்றினால் போதாது. பொருத்தமான நிலையத்துக்கு ஏற்ப வளவில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இதுபோல் சமையலறை தென்கிழக்கு (அக்கினி) மூலையிலும், சுவாமியறை வடகிழக்கு (ஈசான அதாவது சிவன்) மூலையிலும், படுக்கையறை தென் மேற்கு(நிருதி)ப் பகுதியிலும், குளியலறை, மலசலகூடம் என்பன வடமேற்கு (வாயு) பகுதியிலும் அமைய வேண்டும் என்றும் மலசலம் கழிக்கும்போது பகலில் வடக்கு

முகமாகவும் இரவில் தெற்குத் திசை நோக்கியும் இருக்கவேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இதனை,

"பகல் தெற்கு நோக்கார் இராவடக்கு நோக்கார்

பகல்பெய்யார் தீயினும் நீர்"

என்ற பாடல் குறிப்பிடுகின்றது. இதுபோல் கிணறு, வடக்கு(குபேரன்), வடகிழக்கு(ஈசானன்), கிழக்கு(இந்திரன்) மேற்கு(வருணன்) வடமேற்கு(வாயு)ப் பகுதிகளில் அமையலாம். ஏனைய திசையில் அமையக் கூடாது எனக் கூறப்படுகிறது. இதனை,

"மடிநோய் நிருதி யமன்மரணம்
அங்கித் திசையில் மகக்கேடாம்
நடுவே யாயின் பொருள்கேடு
நகரம் மக்கள் தமக்காமே"

என்ற பாடல் வரிகள் கூறுவது நோக்கற் பாலது. சில செல்வாக்குப் பெற்ற ஆலயங்களில்கூட, கிணறு, தீர்த்தக்கேணி என்பனவற்றைப் பிற்காலத்தில் வாஸ்து முறை பற்றிச் சிந்திக்காது கட்டப்பட்டதால், அந்த ஆலயத்தில் பிரச்சினைகள்; சண்டைகள் ஏன்! மரணங்கள்கூடச் சம்பவிக்கின்றன. என விஸ்வகர்மா வழிவந்த பேராசிரியர் பகவதிராஜ் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறுகிறார். அது மட்டுமல்ல தற்போது பிரசித்தி பெற்ற ஆலயங்களைக் கவனித்துப் பாருங்கள். பின்வந்த சோதிடர்கள் இவற்றைக் கவனியாமல் இப்பேற்பட்ட தவறுகளைச் செய்வதே இதற்குக் காரணமாகிறது. பாமர மக்களுக்குப் புரியாதல்லவா? இதுபோல் வீட்டின் நீளம், அகலம், உயரம் என்பனவும்; கதவு, யன்னல், மாடிப்படிகள் என்பனவும் எவ்வாறு அமையவேண்டும்? என முக்கியப்படுத்தப் படுகிறது. அவற்றையும் அவதானத்திற் கொண்டு கட்டுவது, நன்மையைக் கொடுக்கும் என வாஸ்து நூல்கள் கூறுகின்றன. இதுபோல் உறங்கும்போதும் எத்திசையில் தலைவைத்துப் படுக்கவேண்டும், மயிர் கழிக்கவேண்டும், எண்ணெய்

வைக்க வேண்டும், சவரம் செய்ய வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அதாவது,

"நித்திரை சயனம் எண்ணெய்
நிறைமயிர் சவரம் நான்கும்
உத்தமம் கிழக்குநன்றாம்
ஓங்குயிர் வளர்க்குந் தெற்கு
சித்தமே கலங்கும் மேற்கு
திசைகேடு நாலுமூலை
அத்தமும் அழகும் போக்கும்
ஆனதோர் வடக்குத்தானே"

எனக் கூறப்படுகிறது. அதாவது, கிழக்குத் திசை, தெற்குத் திசை என்பன இவற்றுக்கு உகந்தனவாகும். இவற்றை இந்துக்கள் அதிகம் கடைப்பிடித்தாலும், குழந்தைகளின் எதிர்கால நன்மை கருதி ஏனைய மதத்தவரும் இன்று பின்பற்றுகின்றனர். தலையில் எண்ணெய் வைப்பதற்கும் நல்ல நாள்களைத் தேர்ந்து எடுத்திருக்கின்றனர்.

"அருக்கன் எண்ணெய் அழகளிக்கும்
அணியார் திங்கட் காகாது
திருக்காஞ் செவ்வாய் உயிர் போக்கும்
செய்ய புதநற் பொருளுண்டாம்
கருத்தே யழிக்கும் கவின் வியாழன்
கைப்பொருள் போக்கும் கனவெள்ளி
பெருக் முண்டாஞ் சனியெண்ணெய்
பேணி முழுக வல்லாரே".

இவ்வாறு இந்நாட்களில் எண்ணெய் வைக்க முடியாமல், ஏனைய நாட்களில் வைக்க வேண்டிய நிலை ஏற்படின் அதற்கும் பரிகாரம் உண்டு.

"எண்ணெய் இடலாகா திருக்கும் கிழமைதனில்

எண்ணெய் இடவேண்டி இருந்தக்கால் - விண்ணியலும்
ஞாயிறுபூ செவ்வாய்மண் நல்லவியா ழன்னறுகு
நேயவெள்ளி நீறிடுக வே".

இதுபோல் குழந்தைகளுக்கு முதன் முதலில் தலைமயிர் கழிப்பதற்கும் நாள் பார்ப்பதுண்டு.

"ஆடி புரட்டாதி ஐப்பசி மார்கழி
தேடிய ஞாயிறு சனிசெவ்வாய் - நாடியே
கூடியே ரோமம் குறைத்திட வல்லிரேல்
மாடுமைந் தருமாழ் வரே".

ஆதலால் குழந்தைகளுக்கு கட்டாயம் இவற்றைக் கடைப்பிடிப்பது நன்று. இதனால் வீட்டில் நிம்மதி, ஐஸ்வரியம் செல்வாக்கு என்பவற்றுடன் , தம் உறவுகளுடன் நீண்டகாலம் வாழலாம் எனக் கூறகின்றனர். மேலும் ஒருவரது வாழ்வில் நால்வகை வாழ்க்கை நிலையலும் எப்படி வாழவேண்டும் என்றும் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். நாற்பொருள்கள் என அழைக்கப்படும் அறம், பொருள், இன்பம், மூன்றும் நான்காவதான வீட்டின்பத்தை அடைவதற்குக் காரணமாய் அமையும் என்கின்றனர்.

நாற்பொருள்கள்:–

அறம் :

அறம் என்பது தருமம் எனப் பொருள்படும். ஒவ்வொருவரும் தம் வாழ்வில் தருமம் செய்து வாழவேண்டும். அதனால் அவன் சந்தோசம் அடைகிறான் இதனாற்றான் வள்ளுவரும் "அறத்தால் வருவதே இன்பம்" என்றார். எந்த நிலையில் உள்ளவரும் அறம் செய்யலாம். அறம் என்னும்போது பொருள்கள் கொடுப்பது மட்டுமல்ல, கல்வியறிவு ஊட்டுவதும், மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிப்பதோடு; துறவறம் பூணுவதையும் அறவாழ்வு எனலாம். அறவாழ்வு பற்றி வள்ளுவர் கூறும்போது,

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றில் நின்ற துணை"

எனவும் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" எனவும் தருமத்தைக் கட்டாயப் படுத்துகிறார். இன்று அவுஸ்திரேலியா, இங்கிலாந்து முதலான நாடுகளுக்குச் சென்று உழைப்பவர்களால் இலங்கையில் கோடி கோடியாகப் பணம் குவிகிறது. இவற்றுள் ஏழை மக்களுக்கென்றோ அநாதை இல்லங்களுக்கென்றோ சிறிதளவேனும் தருமம் செய்பவர்கள் எத்தனைபேர்? அரிதிலும் அரிது. தாம் அன்று பட்ட துன்பங்களை மறந்து இன்று இன்புற்று இருக்கும்போது கல்லாதவர்கள் அவற்றை எண்ணிப் பார்க்காமல் இருக்கிறார்கள்.ஆயினும், தம்மை நாடி வருகின்ற விருந்தினர்களுக்கு உணவளிப்பவன் ஒருபோதும் இன்னலுக்கு உள்ளாகி அழிவடைய மாட்டான். என்பதை,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவந்து பாழ்படுதல் இன்று"

என்று வள்ளுவர் கூறுவதை நாம் உள்ளத்துள் உன்னிப் பார்க்க வேண்டும். எனவே விருந்து ஓம்புகின்ற இல்வாழ்வான் தம்மிடம் வருகின்ற விருந்தினரை உபசரித்து, உணவளித்து அனுப்புவது மேலானதே. இதை

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி பொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"

என்ற மணிமேகலையின் கொள்கை அழகாக எடுத்துக் காட்டுகிறது. உள்ளத்தில் அன்பு, இரக்கம் என்பன இருந்தால், அறம் செய்ய முடியும். ஆனால் தன்னை வருத்தித் தானம் செய்ய முடியாது. தன்னை நாடி வருவோருக்குத் தன்னால் இயன்றதைக் கொடுத்து வாழ்வதே தருமம் ஆகும். விருந்தளிக்கும் முக்கிய நாள்கள் பற்றி ஆசாரக்கோவை கூறும்போது,

"கல்யாணம் தேவர் பிதிர்விழா வேள்வியென்று

ஐவகை நாளும் இகழாது அறஞ்செய்க

பெய்க விருந்திற்கும் கூழ்".

எனத் திருமண நாள், பண்டிகைநாள், பிதிரர்க்குரிய நாள், விழாக்காலம், வேள்விப் பூசைநாள் ஆகிய ஐந்து நாள்களிலும் பல்வகை உணவுடன் விருந்தளிக்க வேண்டும் என எடுத்துக் காட்டுகிறது. இவையே சிறந்த தருமம் ஆகும். நமது வாழ்க்கை நிலையில்லாதது இந்தக் குறுகிய வாழ்க்கையுள் நாம் செய்யவேண்டிய தான தருமங்களைச் செய்துவிடவேண்டும். நாலடியார் கூறுகிறார்.

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்."

அதாவது யமன், நம் உயிரைக் கவர்ந்து செல்வதற்கு இளமையில் வருவானோ; முதுமையில் வருவானோ, எப்போது வருவானோ எனப் பயப்பட்டு இருக்காமல், அவன் எங்களைக் கொண்டு செல்வதற்குப் பாசக் கயிற்றுடன் பின்னாலே நிற்கிறான் அவன் எப்போதும் உயிரைக் கவர்ந்து செல்லலாம் என்று நினைத்து, அவன் கவரு முன்னரேயே அதர்மத்தை நீக்கி விட்டுவிட்டு, பெரியோர் கூறியதுபோல இயன்றளவு நல்ல வழியில் தருமத்தைச் செய்துவிடுங்கள் என்கிறார். எனவே இப் பிறவியில் செய்கின்ற தருமம், மறு பிறவிக்கும் நன்மையைத் தரும். என்பதை நினைந்து நல்ல தான தருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்வோமாக.

பொருள் :

அறம் செய்வதற்குப் பொருள் அவசியம். தன்னிடம் உள்ள செல்வத்தில் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும்போது, யாவரும் சந்தோசம் அடைகிறோம். இது இவ்வுலகுக்கு மட்டுமன்றி, மறு உலகுக்கும் நன்மை அளிக்கும். இதனாற்றான் "அறத்தால் வருவதே இன்பம்" என்றார் வள்ளுவர். பொருள் என்னும் போது, நிதியைமட்டும்

குறிக்காது. காசு, நெல், மாடு, நிலம் யாவற்றையும் செல்வம் என்றே கருதுகிறோம்.

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை"

என்பர். இறைவன் தந்த உடலைக் கொண்டு நல்ல வழியில் பொருள் தேடலாம். மாற்றுத் திறனாளிகள்கூட, ஏதோ ஒருவகையில் உழைத்துப் பணம் சம்பாதிக்கின்றமை எல்லோருக்கும் நன்மையைக் கொடுக்கிறது அல்லவா?

"நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் - தம்கருமம்
அப்பெற்றியாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றி யாயினும் படும்".

அதாவது, எறும்பைப் போலவும், தூக்கணாங் குருவியைப் போலவும், காக்கையைப் போலவும் தம் செயல்களில் ஊக்கம், விடாமுயற்சி என்பவற்றைக் கடைப்பிடித்தால் நம் வாழ்வு உயரும். எல்லா வளங்களும் அமைந்துள்ள இந் நாட்டில் உழைக்க முடியாதவன், எந்நாட்டிலும் உழைத்து முன்னேற முடியாது என்பது உண்மை. ஆனால் உழைக்கக் கூடியவர்கள் சோம்பேறியாய் இருந்துகொண்டு யாசித்து வாழ்வது பாவம். ஆதலால் உடல் வருந்தி உழைத்து வாழ்வில் சீராக வாழ்வது, நன்மையையே கொடுக்கும்.

இன்பம் :

ஒருவன் தன் சமுதாயத்துக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்தால் அவன் மக்களால் பாராட்டப்படுகிறான். அதனால் அவன் இன்பம் அடைகிறான். இதனால் வாழ்வில் துன்பம் ஏற்படாது. இல்வாழ்வான் என்பவன், பிதிரர், கடவுள், விருந்தினர், தன்னைப் போன்றவர் மட்டுமன்றித் தன்னையும் நேசிப்பவனாக வாழ வேண்டும் என்பதைத் திருவள்ளுவர்

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தா ரோம்பல் தலை".

எனப் பாடுகிறார். இவ்வாறு யாவர்க்கும் அவன் தானம் செய்தானாயின் குடும்பத்தில் ஒற்றுமை, நிம்மதி, சகவாழ்வு என்பன ஏற்பட்டு, பிள்ளை சுற்றமுடன் நீண்டகாலம் சந்தோசமாக வாழலாம்.

வீடு :

ஒவ்வொருவரும் தம் வாழ்வின் இறுதியில் அடைவது வீட்டின்பம் ஆகும். தன் வாழ்வில் அவன் நால்வகை வாழ்க்கை நிலையிலும், மேலே கூறிய அறம், பொருள், இன்பம் ஆகிய யாவற்றையும் ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்தால் நிச்சயமாக மோட்சம் கிடைக்கும் என்பதை

"ஈதலறம் தீவனைவீட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்து - ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைத் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு" என்பர்.

எனவே வைதீகச் சமயங்களின் கூற்றுக்கு இணங்க நாம் வாழ்வாங்கு வாழ்ந்தோமாயின், எடுத்த பிறவிக்கு உரிய பயனைப் பெற்று வீட்டின்பம் அடைவோம் என்பது உறுதி.

மனமும் மகிழ்ச்சியும் :

மனம் என்பது கணத்துக்குக் கணம் மாறும் தன்மையுடையது. இதனால்தான் மனத்தை, குரங்கு மனம் என்பர். ஆயினும், இது மகிழ்ச்சியை நோக்காகக் கொண்டே அலையும். ஒன்றிடம் உங்களுக்கு ஈடுபாடு ஏற்படும் பொழுது, அது மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய விடயமாக மாறிவிடும். இதுபோல் மனமகிழ்ச்சி இல்லாமைக்கும்; மனமே காரணமாக அமையும். எதையும் நிதானமாகச் செய்ய வேண்டும் அவசரப் புத்தியால், நிதானத்தை இழக்கிறோம். இதனால் ஆத்திரமும் , கோபமும் , மகிழ்ச்சியை விரோதியாக்கி விடுகிறது. இதனால் வெற்றி கிட்டுமா?. மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதே ஒருகலை என்பதை உணர்ந்து

நடந்தால், இன்பம் உங்களைத் தேடிவரும். மனக் குழப்பமின்றி மகிழ்ச்சியுடன் இருப்பவன், வாழ்க்கையை நேசிக்கத் தெரிந்தவனாவான்.

உடம்பு என்ற குளத்தில்; உள்ளம் என்ற தாமரை அரும்பும் போதுதான், இறைவன் என்ற ஆதவன் தோன்றி; உள்ளத் தாமரையை மலரச்செய்து மகிழ்விப்பான். இதை யாரும் நினைப்பதுண்டா?. குறுகிய மனம்படைத்த சிலர் நல்லதை நினைக்க மாட்டார்கள், நல்லதைச் செய்ய மாட்டார்கள். இருண்ட மனம் கொண்டவர்களாகவே இருப்பர். சுகமும் மகிழ்ச்சியும் இவர்களைத் தேடி வருகின்ற போதிலும்; இவற்றை அடையாளங் கண்டுகொள்ள மாட்டார்கள் ஈற்றில் எனக்கு இப்படி ஆகிவிட்டதே என்று கவலைப் படுவார்கள். கதறி அழுவார்கள். ஏற்றம் ஒன்று இருந்தால் இறக்கம் ஒன்று இருப்பதுபோல; இன்பமும், துன்பமும் மாறிமாறி வரும்.

"வாழுஞ் செல்வமும் தாழிலம் பாடதும்
வைய கத்துரள் சக்கரம் போலுமே
சூழு மானிலத் தின்பமும் துன்பமும்
சுற்றுகின்றவி ராட்டினம் போலுமே
வீழு மாயுளும் தேகமும் மண்ணினில்
விளங்கி மங்கிடும் மின்னலைப் போலுமே"...

என அப்துல் மஜீதுப் புலவர் வாழ்க்கையின் தத்துவத்தை (தாம் இயற்றிய ஆசாரக்கோவை என்ற நூலில்) அழகாக எடுத்துக் கூறகிறார். ஆதலால் துன்பத்தைக் கண்டு துவண்டுவிடுவது கோழைத்தனம். எதையும் சமநோக்கோடு பார்ப்பதே நன்று. நான் எதிர்பார்த்தது கிடைக்கவில்லையே என வருந்துவதை விடுத்து, கிடைத்தது போதும் என நினைத்தால், அது எமக்குப் பொன்செய்யும் மருந்தாகும். எந்த நேரத்திலும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழலாம். இது நீண்ட ஆயுளுக்கும் வழிவகுக்கும் என்பது உறுதி.

உறவு :-

உறவு என்னும்போது, இறைவனாற் படைக்கப் பட்ட உயிர்கள் அனைத்தும் தத்தம் இனங்களுக்கு இடையே கொண்டுள்ள பிணைப்பின் அடிப்படையில் உருவான ஒன்று எனலாம். மனிதனைப் பொறுத்தவரை பிறப்பால் தொடரும் உறவுகளைவிடப் பிணைப்பால் தொடரும் உறவுகளே உன்னதமானவை. சிலர் தாயைத் தவிக்கவிட்டுத் தாரத்தின்மடியில் லயித்துக் கிடக்கின்றனர். சிலர் தந்தையைப் பிச்சைக்கு அலையவிட்டுத் தாரத்துடன் இன்புற்று வாழ்கின்றனர். உறவுகள் பல்வேறுபட்டவை. வாடகைக்கு வாழும் வீடுபோலச் சில உறவுகள். சொந்த வீட்டில் வாழ்வது போலச் சில உறவுகள். பாடசாலைகளிலோ, அலுவலகங்களிலோ வேலைசெய்யும் காலம்வரைதான் அங்கு உறவு. அவற்றை விட்டுப் பிரிந்தால் அங்கே நமக்கு இடமில்லை. வாழ்ந்தால் சிரிக்கிறான், தாழ்ந்தால் ஒதுங்குகிறான். செத்தால் ஒப்புக்காக அழுகிறான். இது எவ்வகை உறவு?. உண்மையான உறவா அன்றிப் போலி உறவா?

உண்மை உறவு:-

உடன் பிறந்தார் யாவரும் உடன்பிறப்பே (இரத்த உறவே). ஆயினும் இக்காலத்தில், உண்மையான உறவென எல்லாரையும் கூறமுடியாது. ஒவ்வொருவரையும் ஆசைப் பிசாசு ஆட்டிப் படைக்கிறது. அதனால் தம் எண்ணத்தை நிறைவேற்ற ஓடியோடி உழைப்பதனால், பாச உணர்வு அழிந்தே விடுகிறது. வறிய ஏழையோ; நன்மனம் உள்ளவரோ; மிகக் குறைவு. உடுக்கை இழந்தவன் கைபோல, துன்புற்ற நேரத்தில் இடுக்கண் கழைபவராக இருப்பின், அவரே உண்மையான நட்பு உடையவராகின்றனர். அவர்கள் நடு நீதியானவர்கள். பற்றில்லாதவர்களுக்குப் பரிந்து வாழாதவர்கள். அது எவ்வாறெனில் பாரம் மீதூரப்பெற்ற கற்றூணானது; மேலும் பாரம் ஏறினால் இடிந்து விழுமேயல்லாமல், வளைந்து கொடுக்கமாட்டாது என்பதைப்போல, ஈவிரக்ககம் இல்லாதவர்களுக்கோ, ஆக்கிரமிப்புக்கோ பணிந்து போகாமல் இருப்பார்கள் இதனை ஔவையாரும்,

"உற்ற விடத்து உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ – கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கில்
தளர்ந்து வளையுமோ தான்"

என வன்மையாக எடுத்துக் காட்டுகிறார். மற்றவருடன் கொண்ட நட்பும், நாயைப் போன்றவர் நட்பாக இருக்கலாமே அன்றி; யானையைப் போன்றவர் நட்பாக இருக்கக கூடாது. ஏனெனில், யானையானது, அறிந்தறிந்தும்; உணவு கொடுத்துக் குளிப்பாட்டிப் பயிற்றுவித்துப் பாதுகாக்கும் பாகனையே கொல்லும். ஆனால் நாயானது, தன் எஜமான் தன்மேல் சினந்து ஈட்டியால் குத்திக் கொலை செய்தபோதிலும், வாலைக் குழைத்து முனகிக் கொண்டே இறக்கும். இதனை

"யானை யனையார் அன்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்".

என உவமித்துப் பாடுகிறார் நாலடியார். இதுபோல் நல்ல புத்தகங்களையும் நல்ல நண்பர்கள் என்பர் ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்கும் போது அது இன்பம் பயக்கும். அதுபோல கற்றவர்களுடன் பழகும்போதும் பல நன்மை பயக்கும் என்பது

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு" என வள்ளுவர் கூறுகிறார்.

போலி உறவு :-

மனிதன் ஒரு திருந்திய விலங்கு. சிதறிக் கிடந்த மனிதன் கூட்டமாகினான். அவ்வாறு வாழ்ந்த இடம் "குறிச்சி" என அழைக்கப்பட்டது. அது, மிருகங்களை ஒன்றுகூடி எதிர்ப்பதற்கும் வாய்ப்பாகின. பல குறிச்சிகள் சேர்ந்து கிராம் ஆகியது. இதனால் ஒருவருக்கொருவர் உதவவும்; சில பழக்க வழக்கங்கள்

சம்பிரதாயங்கள் என்பனவற்றைக் கடைப்பிடிக்கவும், இன்பதுன்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டு முன்னின்று உழைக்கவும்; வாழ்க்கையை ஸ்திரப்படுத்தச் சிந்திக்கவும் மனிதன் கற்றுக்கொண்டான். இதனால் நாகரிகம் வளர்ந்து நகரமாகியது. சில ஏற்றுக்கொள்ளத்தக்க நியதிகளும் வரையறுக்கப் பட்டன. சில நடவடிக்கைகள் நல்லனவாகவும், சில புனிதமாகவும் கருதப்பட்டன. இந்த வகையில் தாய் - தந்தை, கணவன் - மனைவி, பெற்றார் - பிள்ளைகள் முதலான உறவுகள் முக்கியப் படுத்தப்பட்டதோடு, மாமன் மாமி, சுற்றத்தார் முதலான உறவுகளும் சிறப்புற்றன. இந்த உறவுகள் பின்பு சட்டங்களாகின.

இன்று சட்டம் இருப்பினும் இவை நாகரிகத்தின் தாக்கத்தாலும், ஊடகங்களினாலும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்தியாவில் வெளிவரும் திரைப்படங்களைவிட, இந்திய நாடகங்கள் நம் தமிழ்ச் சமூகத்தைச் சீரழிக்கும் நிலைக்கு உருவாகியுள்ளன. அங்குள்ள மாமி - மருமகள் பிரச்சினை; இன்று இலங்கையிலும் தொற்றி விட்டன. அத்தோடு சகோதரன் (சக உதரன் - வயிற்றில் பிறந்தவன்) சகோதரனை மதிப்பதில்லை. தாய் - தந்தையரைப் பிள்ளைகள் தமக்குப் பாரமாக நினைத்து; வயோதிபர் இல்லத்தில் இடுகின்றனர்; பிச்சை எடுக்கப் பார்த்திருக்கின்றனர்; பட்டினிபோட்டுத் தவிக்க விடுகின்றனர். பாகப்பிரிவினை கொண்டு பங்குக்காக வழக்காடலும் நடக்கின்றன. இவை நல்லவையா? இதற்குக் காரணம், ஒருவகையான ஆசைப் பிசாசு அல்லது சாத்தான் படுத்தும் பாடுதான்.

சமுதாயத்தில் தவறுவிட்டால் பரிகாசம் பண்ணுகிறான். வாழ்ந்தால் பொறாமை கொள்கிறான். தாழ்ந்துவிட்டால் ஒதுக்குகிறான். பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளையிலிருந்து; பணக்காரன் வரை, உண்மையான உறவு பேணப்படவில்லை. ஒருவர் இறந்துவிட்டால், உறவினர்கள் கார் முதலிய பல்வேறு ஆடம்பர வாகனங்களில் கடமைக்காக வந்து குந்தியிருந்து; ஒப்புக்காகக் கண்ணீர்விட்டு அழுகின்றனர். பின் இரவோடிரவாக வந்தபடியே போய் விடுகின்றனர். இவை தானா உண்மையான உறவு?. இவையெல்லாம் போலி உறவு என்பது விளங்குகிறதல்லவா?.

"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு".

என்ற ஔவையின் பாடலைப் போல, உண்மையான உறவுள்ளவர் நீர் வற்றிய போதிலும்; அங்கே வறண்டு நிற்கும் தாவரத்துடன் கொட்டி, ஆம்பல், நெய்தல் முதலான தாவரங்கள் தாமும் வறண்டு மடிவதைப்போல, அவன் வறுமையுற்ற போதிலும், அவனோடு உழன்று; அவனைத் துன்பத்திலுருந்து தூக்கிவிடுபவன்தான் உண்மையான உறவினன். ஆனால் நீர் வற்றியவுடனே பறவைகளும் அவ்விடம் விட்டு ஓடிவிடுவதுபோல், போலி உறவுள்ளவராக வாழக்கூடாது.

உடல் இருக்கும்வரை எவ்வளவோ ஆசைகள் ஒருவனை உச்ச நிலைக்கு இழுத்துச் செல்கின்றன. ஆசையின் பயன்தான் பிறப்புக்குக் காரணம் என நூல்கள் கூறினாலும், அதிக ஆசை, பெரு நட்டத்தையும் ஏற்படுத்தும். "மண்ணாளும் மன்னரும் ஒருபிடி சாம்பலாவது திண்ணம்" என்பதை மனிதன் உணர்கின்றானா? இந்த உயிரானது, உடம்பை விட்டுப் பிரிந்தபின்னர், உடம்பானது உயிரைச் சுமக்க முடியாது. ஆதலால் இறைவன் வீட்டின்பத்தைத் தந்தால் காயமாகிய இந்த உடம்பை விரும்ப மாட்டேன். எனப் பாடுகிறார் ஒரு ஞானி.

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஏதுபயன்
எங்காண் சுமந்திருப்ப திச்சரக்கை – அங்காண்
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே".

(காயம் - உடம்பு. வெந்தயம் - உயிர். சீரகம் - மோட்சம்) என்பதுபோல் எடுத்த பிறவியை அடையும் நோக்கில் வாழ்பவர்கள் அரிது. பிழையான வழியில் முன்னேறியாயினும், ஆடம்பரவாழ்க்கை வாழவே அநேகர் விரும்புகின்றனர். இதுபோல மனிதனை அல்லலுக்கு உள்ளாக்கும் ஆசைகள் பல. அவற்றுள் மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை (பொன்னாசை) என்பன இக் கலியுகத்தில் மக்களது உள்ளத்தில் தேங்கிக் காணப்படுகின்றன.

இம் மூவகை ஆசையினால் இயற்கையின் சீற்றமும், அதனால் அழிவுகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

மூவகை ஆசைகள் :–

மண்ணாசை :-

வாழ்க்கையின் பயணம் ஆசையின் கையில் இல்லை. ஆசை அவனை ஆட்டிப் படைக்கிறது. அவனுக்கு நிம்மதி இல்லை, நித்திரை இல்லை ஆசையைக் குறைத்துக் கொண்டானாயின் , வாழ்வாங்கு வாழலாம். நானே பொய்; என் உடம்பு பொய்; என் அன்பு பொய்; மொத்தத்தில் உலகில் எல்லாமே பொய் என்பதைச் சிந்திக்கிறானா? காயமே இது பொய்யடா என்றும், வாழ்வே மாயம் என்றும் அறிஞர்கள் கூறுகிறார்களே. ஆதலால்தான் அதிக ஆசையைக் கட்டுப்படுத்தத் தனிமையை அல்லது துறவை நாடுகின்றனர்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளுக்கிணங்க அவனது சிந்தனை என்ற அங்குசத்தால்; ஆசை என்ற மத யானையைக் கட்டுப்படுத்தினால், மானுடம் நிலவும். அவ்வாறின்றி ஆசை என்ற பேரரக்கன் வளர்ந்துவிட்டால், கொள்ளையும், கொலையும் ஏற்படுகிறது. அதற்கு ஒரு சிறு உதாரணம்: அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே காணிப் பிரச்சினை ஒன்று நடக்கிறது; இறுதியில் இருவரும் கோர்ட்டுக்குப் போகின்றனர். மறுநாள் இராமாயணக் கதை ஓரிடத்தில் நடக்கிறது. அதனைக் காதாரக் கேட்டுக்கொண்டிருக்கிறான் அண்ணன்.

"மன்னவன் பணியன்றாகில்
நும்பணி மறுப்பனோ வென்
பின்னவன் பெற்றசெல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
உன்னினி யுறுதியப்பால்
இப்பழி தலைமேல் கொண்டடேன்

மின்னொளிர் கானமின்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்".

எனப் பாடப் படுகிறது. அதில் கையேி கூறுகிறாள் ராமா! உன்னை உன் தந்தை பதினான்கு வருடம் வனவாசம் செய்ய வேண்டுமாம் என்று. அதற்கு இராமன் கைகேயியிடம் கேட்கிறான், "தாயே அப்பா சொன்னார் என்றுதான் சொல்ல வேண்டுமா? நீங்கள் காலால் இட்டதை நான் தலையால் செய்து முடிக்க மாட்டேனா" என்று. இராமன் கானகம் சென்றதை எண்ணிப் பாரக்கிறான். அப்போது அண்ணன் நினைக்கிறான். "ஐயோ! இராமன்தான் மனிதன். தான் ஆண்டால் என்ன; தன் தம்பி ஆண்டால் என்ன? என்று எண்ணித் தன் தம்பிக்காகத் தனக்குரிய இராச்சியத்தையே விட்டுக் கொடுத்தானே இராமன்; அவன்தான் மனிதன்". நாமும் அப்படி விட்டுக் கொடுப்போம் இனிப் பூமி ஆசை வேண்டாம். இன்றைக்கு இருப்பவன் நாளை இருப்பானா? என்று நினைத்து வீட்டுக்கு வருகிறான் நன்றாகத் தூங்குகிறான். விடிந்ததும் அக்கதையை மறந்துவிடுகிறான் பழையபடி கோர்ட்டுக்குப் போகின்றான். இறுதியில் தம்பியால் அடிபட்டு அண்ணன் இறக்கிறான். இதுதானா வாழ்க்கை?. இந்த மயான வைராக்கியம் நம்மிலிருந்து அகன்றாலேயே, வாழ்வு வளம்பெறும். உலக பந்தம் உள்ளவனுக்கு, ஆசை இருக்கத்தான் செய்யும் அதற்காக ஒருவருடைய பொருளையோ, பூமியையோ அபகரிப்பது பாவம். அபகரித்த பூமியில் நிம்மதியாக வாழ முடியாது. மற்றவர் மனம் வேதனை அடைய அடைய, உய்வடைய முடியாது. இறுதியில் அபகரித்தவருக்கும் கேடு விளைகிறது.

பெண்ணாசை:-

கட்டிளமைப் பருவ ஆண்களுள், அநேகருக்கு ஏற்படுவது பெண்ணாசை. பன்னிரண்டு வயதுப் பருவத்தை அடைந்ததும், நான் எப்படி யெப்படியெல்லாம் வாழவேண்டும் எனச் சிந்திக்கிறான். இப் பருவத்தில் இவ் இளவயதினருக்கு ஆன்மீகம், சமய அறிவு என்பன பாடசாலைகளிலும், வீட்டிலும் புகுத்தப்படும்போது, அவர்கள் பொறிவழி போகும் புலன்களைக்

கட்டுப்படுத்த வாய்ப்புண்டு. அவ்வாறு இல்லாததால் ஆடவர், பெண்டிரைக் கண்டதும், "அவளைச் சொல்லடிக் காண்பேன் இனி" என்ற சங்கப் பாடலுக்கமைய அவர்களைத் தேடிப் போகின்றனர். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே.

ஆயினும், தார்மீக வழியில் சிந்தித்தால், நற்பெயர் பெறச் சந்தர்ப்பம் உண்டு. பெண் என்பவள் நம் நாட்டின் கண்கள்; தாய் போன்றவள் என எல்லோரும் நினைத்தால், நடுநிசியிலும் பெண்கள் நினைத்த இடத்துக்குச் சென்று வரமுடியும். இப்படி நினைக்கிறார்களா ஆண்கள்? இல்லை. சின்னத்திரை; இன்ரனெற்; முகப் புத்தகங்கள் முதலான ஊடகங்களில் காட்டப்படும் தீய விடயங்களை இப் பருவத்தினர் பார்ப்பதால், அவன் திசைமாற சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதனால் அவன் எதிர்ப்பாலாரை ஆசைவார்த்தை காட்டுவதற்கும், துஷ்பிரயோகஞ் செய்வதற்கும் நினைக்கின்றான். தாய் தந்தை, மாமன் மாமியரை விடக் காதல்தான் அவர்களுக்கு முக்கியமாகிறது. அவர்களைக் கொன்றேனும், கடிந்தேனும் தம் காதல் நாடகத்தை நடத்துகின்றனர். இதனால் அடாது செய்து படாத துன்பம் அனுபவிக்க நேரிடுகிறது.

ஏன்? ஒருத்தி திருமணமானவள் என்று உணர்ந்துங்கூடத் தன் ஆசை வலையை விரித்து அதில் சிக்கவைக்கும் காமுகர்களும் உண்டு. அவன் நிமிர்ந்து பார்த்தால், குனிந்து தன் முந்தானையை இறுக்கிப் போர்த்திக் கொண்டாளாயின், அது அவளுக்கு மாங்கல்யப் பெருமையைக் கொடுக்கும். இக்காலத்தில் அதனையும் மீறி, நிமிர்ந்து தன்னைக் கவர்ச்சிக்கச் செய்பவளும் உண்டு. அது ஒரு சிலரே.

"ஆடியாடி நடக்கிறதும் அசைந்தசைந்து நடக்கிறதும்
ஏவியேவி நடக்கிறதும் - இந்த
இளந்தாரிக்கு வாழவென்றோ"

என்ற மட்டக்களப்புக் கவிக்கு ஏற்பச் சிலரது நடையுமுண்டு. எல்லை மீறிச் சிரித்துவிட்டால், பித்தம் பிடித்த

ஆடவனுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோல, அவளிடம் திசைதிருப்புகிறது.

"பொம்பளை சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்சாப் போச்சு" என்பது போல, அவளும் தன்னைக் கட்டுப்படுத்தி வாழப் பழகிக் கொள்வது நல்லது. இந்தவழியில் தூபம் போடுபவர்களும் சிலர் உண்டு. ஒருவரன்றிப் பலரை ஏமாற்றுபவளும் உண்டு. இதனால் மதிமயங்கிப் பைத்தியமாகும் ஆண்களும் உண்டு. இதனால்தான்,

"ஆல கால விடத்தையும் நம்பலாம்
ஆற்றை யும்பெருங் காற்றையும் நம்பலாம்
கோல மாமத யானையை நம்பலாம்
கொல்லும் வேங்கை புலியையும் நம்பலாம்
கால னார்விடு தூதரை நம்பலாம்
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே".

என்ற விவேகசிந்தாமணிப் பாடல் இதனைப் பறை சாற்றுகிறது. எனவே ஆசைப்பிசாசு பிடித்த பெண்களை நம்பக்கூடாது என்பர். பொதுவாக, பெண்கள் நல்லவர்களே. இறுமாப்பு எய்தியவர்கள், ஓரளவேனும் கல்வி அறிவு இல்லாமலும், வரவுக்கேற்ற செலவு செய்யத் தெரியாமலும் இருப்பின், அது பெரும் துன்பத்தையும் கொண்டு வரும்.

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்குற்றம் குற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்".

அதாவது பொதுவாக நோக்கில், படிக்காதவர்களது வார்த்தை, கற்றவர்களுக்கு ஒரு சுமையாகும். வறியவர்களுக்குத் தருமம் பெரும் சுமையாகும். குலை ஈன்றது, தாய் வாழைக்குச் சுமையாகும் (கூற்றமுமாகும்). இல்வாழ்க்கையில் இசைந்து வாழாதவள், குடும்பத்துக்குச் சுமையாகும். என்கிறார். எப்படியிருப்பினும் குடும்பத்தின் பெருமை, இல்லாளிலேயே தங்கி இருக்கிறது. அப்படியில்லாமல் பத்தாவை(கணவனை) எதிர்த்தும்; இணக்கம் இன்றிப் பிணக்காய் இருப்பின்; அவர்களை மணந்தவர்கள் கலங்கி அலைய வேண்டிய நிலையும் உருவாகும். அதாவது,

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யாமாகில்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் - சற்றேனும்
ஏறுமாறா யிருப்பாளே யாமாகில்
கூறாமல் சந்நியாசங் கொள்".

என்றவாறு ஒருவன் வாழ்க்கையை வெறுக்க ஒருபெண் இடம் வைக்கலாமா? இதுபோல் திருமணம் என்ற பொறைக்குள் புகுந்துவிட்டால், தம் தாலியை வேலியாகப் பாவித்து வரவேண்டும். இவ்வாறு கணவனுக்குப் பணிவிடை செய்து, வருவிருந்து வைகலும் ஓம்பி வாழும் பெண்கள் அநேகர். இதற்கு மாறாகவும் சிலர்,

"கைப்பிடி நாயகன் தூங்கையி
லேயவன் கையை எடுத்து
அப்புறம் தன்னில் அசையாமல்
முன்வந்து அயல் வளைவில்
ஒப்புடன் சென்று துயிநீத்துப்
பின்வந்து உறங்கு வாளை
எப்படி நான் நம்புவனோ
இறவைா கச்சி ஏகம்பனே."

என்ற பாடலுக்கு இணக்கமுற வாழ்பவரை நாம் எப்படிப் பெண்ணென்று சொல்லலாம்?. வயிற்றுக் கொடுமையாயினும் திருவள்ளுவரது மனைவி வாசுகியைப்போல வாழ்ந்தால் எக்காலும் இன்பம் தரும். இதனாற்றான் பாதைமாறும் திமிர்பிடித்த பெண்கள் சிலரையும்; சில கெட்ட ஆண்களையும் தண்டிக்க வேண்டும் என்று முன்னோர் உதாரணம் கூறினரோ?.

" துச்சனரும் பொன்னும் துடியும் துரகதமும்
அச்சமற முன்னிற்கும் ஆயிழையும் - நச்சரவும்
கண்டித்த எள்ளும் கரும்பு மிளநீரும்
தண்டிப்பார்க் கன்றோ ஜெயம்".

என்ற பாடல் அசாதாரணமானவர்களுக்கே கூறியிருக்க வேண்டும். அதாவது கெட்டவனையும்; தங்கத்தையும்; உடுக்கையையும்; குதிரையையும்; திமிர்பிடித்த பெண்ணையும்; விசமுள்ள பாம்பையும்; எள்ளையும்; கரும்பையும்; இளநீரையும் தண்டித்தால்தான், வெற்றி என்கிறார் புலவர். "ஐயோ பெண்களை இவர் இப்படிச் சாடுகிறாரே" எனப் பலர் நினைக்கலாம். அப்படியல்ல ஒருசிலரைத் தவிரப் பெண்கள் புனிதமானவர்கள். ஆனால் விவாகமான பின்பு, சில ஆண்கள் மனைவியைக் கடும் கட்டுப்பாடு என்ற சிறைக்குள் வைத்துத் துன்பப் படுத்துவது மிகப் பாவம். பஸ்ஸில் ஏறும்போதும்; பிரயாணஞ் செய்யும்போதும் மற்றவரை நிமிர்ந்து பார்க்கக் கூட விடமாட்டார்கள். பக்கத்தில் இருக்கவும் விரும்ப மாட்டார்கள். தாம் உழைத்தும் முன்னேற மாட்டார்கள். இது சரியா?.

அப்படியான சிறைக்குள்ளாக்கும் ஆண்கள் கடும் துன்பத்தை அனுபவிப்பர் என்பது திண்ணம். "பெண்புத்தி பின்புத்தி" என்றொரு பழமொழி உண்டு. இதன் அர்த்தம் என்ன? பெண்களது ஆலோசனையைச் சில ஆண்கள் ஏற்பதில்லை. அதனால் அவர்கள் இறுதியில் தான், "ஐயோ இவளது அறிவுரையைச் செவிமடுத்தோமா"? என்று கவலைப்படுகின்றனர். ஆதலால் அவர்களை இழிவுபடுத்தக் கூடாது. அவர்களது அறிவுரையைக் கேட்க வேண்டும். தன் தாயைப்போல அவளையும் நினைக்க வேண்டும். அவளுக்கு உரிய

அந்தஸ்தைக் கொடுக்கவேண்டும். எனவே குடும்பம் என்றால்; கணவனும் மனைவியும் பூவும் மணமும் போலவும்; ஈருடலும் ஒருயிரும் போலவும்; கொழுநனுக்கு ஏற்ற இல்லக் கிழத்தியாய் தற்காத்துத் தற்கொண்டான் பேணி, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் சிரித்து வாழவேண்டும்.

இதுபோல ஆண்கள் எல்லோரும் நல்லவர்கள் என்று கூறமுடியாது. சில இளம் பருவத்து ஆடவர் மங்கையரை மதிமயக்குகின்றனர் அவள் மயங்கி விட்டால், சிலநாட்களில் ஏமாற்றியும் விடுகின்றனர்.பெண்களைத் தம் மாயவலையில் சிக்க வைத்து, இரசிக்கும் வேட்டை நாய்களும் உண்டு என்பதை மறக்க முடியாது. பெண்ணானவள் ஆடவனை விரும்பி விட்டால், அதற்குக் குறுக்கிடுபவள் ஆடவனின் தாய். இறுதியில் அதிகப்படியான சீதனம் எதிர்பார்ப்பவளும் பெரும்பாலும் தாய்தான். அதற்கு ஈடுகொடுக்க முடியாத பெண்ணின் குடும்பம் வேதனையடைகின்றது. ''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்பது போல இப்பேற்பட்ட சீதனப் பிரச்சினைக்கு தாயும் மூல காரணமாகிறாள் இவ்வாறு பலர் இன்றும் கன்னிகையாய் இருந்து காலங் கழிப்பதற்குக் காரணம் சில ஆண்களே. எனவே இல்வாழ்க்கையில் இருபாலாரும் வண்டிக்கு ஏற்ற இரு சக்கரங்கள் போல வாழ்ந்தால், மனிதருள் மாணிக்கமாக வாழலாம்.

பொன்னாசை (பொருளாசை):-

எவரும் தம் வாழ்வில் தாராள வசதியுடன்தான் வாழவே நினைக்கின்றனர். ஆனால் சில சந்தர்ப்பங்கள் அவனைப் பெருஞ் செல்வந்தனாக்கவும்; வறியவனாக்கவும்; வாழ்வின் கடை நிலைக்குக் கொண்டு செல்லவும் வைக்கிறது; பொருளில் கொண்ட ஆசை. இதனால் வேறு பொருளுக்கு ஆசைப்பட்டு களவு, கொலை முதலான தீய செயல்களுக்கும் இட்டுச் செல்கிறது. தான் செய்கின்ற வேலைக்கு ஏற்ற கூலி கிடைத்தால் , "போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து'' என்பதற்கிணங்க நிம்மதியாக வாழலாம். மற்றவரது பொருளுக்கு ஆசைப்பட்டும், தவித்த முயலடித்தும் கொள்ளை லாபமடித்தும் சுகபோகங்கள் அனுபவிப்பது தவறு.

ஆனால் நம் சமுதாயமோ, ஒருவன் பிழையான வழியில் உயர்ந்தாலும்; அவன் பெரிய கட்டிடமொன்றை ஊரில் கட்டிவிட்டாலோ; ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்தாலோ அவன் நல்லவன்; அவன்தான் மனிதன். இப்படித்தான் கொடுக்கவேண்டும் என்று எண்ணுகிறார்களே தவிர, இது எவ்வாறு வந்த பணம், இது சரியா? இது நிலைக்குமா? என்று சிந்திக்கிறார்களா? இல்லவே இல்லை. ஆதலால் பிழையான வழியில் தேடும் பணம், வீணாக அழிந்துவிடும். இதனைத்தான் ஔவைப்பிராட்டி,

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்த
கேடுகெட்ட மானிடரே கேழுங்கள் - கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் ஆரோ அனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்"

என்று மனம் நொந்து கூறுகின்றார். இப்பணம் தனது சந்ததியினருக்குச் சென்றடையுமா? இல்லை பிறரே அனுபவிப்பர். இதனால்தான் நாவலர் பெருமானும், ஒருவரது உழைப்பை நான்காகப் பிரித்து; அதில் இரண்டு பங்கைத் தம் உணவுக்கும்; ஒருபங்கை ஆஸ்தியின் பொருட்டும்; மீதி ஒரு பங்கை தானத்துக்கும் செலவிட வேண்டும் என்கிறார். சரிதான் அவ்வாறின்றிச் சேர்த்த பணம் எவ்வாறு போகும்? யாருக்குப் பயன்படும்?.

"நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பும்புக்காம் பேய்க்காம் பரத்தைக்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் காவுக்காம் கோவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகுங் காண்".

என்கிறது விவேகசிந்தாமணி. அதாவது; இறையடியார்க்கு உவந்து அளிக்காத பொருட்கள், பலாத்காரத்துக்கும்; பேய்க்கும்; வேசியர்க்கும்; தீயவர்க்கும்; கொள்ளையர்க்கும்; கள்ளுக்கும்; வலிதாகப் பறிக்கும் மன்னர்க்கும்; வீட்டை அழிக்கும் தீயினுக்கும் பயன்படும் என்கிறார் புலவர். எனவே நாம் தேடிய செல்வங்களில் நான்கிலொரு பங்கைத் தானஞ்செய்தால்,

அதுவே நாம் போகும் வழிக்குத் தேடிவைத்த முதுசொம் ஆகும். ஆதலால் நாம் தேடுகின்ற செல்வங்கள் நேரிய வழியிலும் ; மற்றவரால் சரியெனத்தக்க வழியிலும் அமையப் பெற வேண்டும்.

கற்றோரும் மற்றோரும்: -

மனிதனாகப் பிறந்தவன் தனது வாழ்வில் கல்வியறிவில் சிறந்து விளங்குவது, அவனுக்கு மட்டுமன்றி, எல்லோருக்கும் நன்மையைக் கொடுக்கும். அரசனாயினுஞ் சரி, அமைச்சனாயினுஞ் சரி அவர்களைவிடக் கல்வியறிவு உள்ளவனே சிறந்தவன் என்பதை,

"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கில்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் - மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என ஔவையார் கூறுகிறார். கல்வி அறிவில் சிறந்தவன் அவனைப் போன்ற அறிவுள்ளவனோடு சேரும்போது அவ்விருவருக்கும் சிறப்பையும் நன்மையையும் கொடுக்கும். அறிவிலிகள் இருவர் சேர்ந்தால் இடையில் மனக் குழப்பமாகிப் பெருஞ் சண்டை ஏற்பட்டு, ஈற்றில் விரும்பி உண்ணும் காகத்துக்கே இரையாகவேண்டிய நிலை உருவாகும். இதனைத்தான் அவர்,

"நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாப்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்றில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பின் முதுகாட்டில்
காக்கை யுவக்குப் பிணம்". எனவும்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

எனவும் கூறுகிறார். எனவே கணக்கும், மொழியும் ஒருவனது வாழ்வில் அவசியமாகும். கல்வியறிவு இல்லாதவனுக்கு இருகண்களும் இரு புண்களுக்குச் சமமாகக் கருதப்படும் என்பதை

"கண்ணுடையா ரென்பார் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்".

எனக் கூறும் வள்ளுவர் வாக்குப்படி, இறைவன் நற்றாள் தொழாமலும், கற்றதற்குத் தக நிற்காமலும் விடின், கற்ற கல்வியாற் பயனில்லை. இது இக்காலத்துக்கு மட்டுமன்றி, ஏழேழு பிறப்புக்கும் தொடர்ந்து பயன் தரவல்லது இக் கல்வியே யாகும். ஒருவன் வாழும் காலத்தில் அவனுக்குப் புகழ் கிடைக்கும். மற்றவருக்குப் புகட்டப் புகட்டக் குறைவே ஏற்படாது. தாம் உள்ளவரை பெருமையே ஏற்படும். அதனால் நம் வாழ்வில் மயக்கத்தைத் தீர்க்கும் மருந்து கல்வியே அன்றி வேறில்லை என்கிறார். இதனை,

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாத்
தம்மை விளக்குமாத் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணோங் கல்விபோன்
மம்ம ரறுக்கும் மருந்து"

(மம்மர் - மயக்கம்) என ஆணித்தரமாகக் கூறுகிறார். கல்வியறிவு இல்லாதவர்களால், உலகத்துக்குக் கேடு விளையும் என்பதை இப்போது காண்கிறோமல்லவா?. படிப்பறிவு இல்லாதவர்கள் தேடிய செல்வம், ஆயிரக் கணக்கான அறிஞர்களை அழித்துவிட்டதோடு, ஈற்றில் அவர்களுக்கும் அது உலை வைத்தும் விடுகின்றன. கல்வியறிவு இல்லாதவன், அறிஞர் அவையில் புகுந்து எதுவும் பேசாது இருப்பது, நாயொன்று எதுவுமே பேசாது அமைதியாக இருப்பதற்குச் சமனாகும். அதுபோல் அவன் ஏதும் கூறினாலும், நாய் குரைப்பதற்குச் சமனாகும் என்பதை,

"கல்லாது நீண்ட ஒருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு - மெல்ல
இருப்பினு நாயிருந் தற்றே யவனே
துரைப்பினு நாய்குரைத் தற்று"

என்ற பாடல் அழகாக எடுத்துக் காட்டுகின்றது. இதுபோலச் சமூகத்தில் வேலைத் தலங்களிலும், ஏனைய அலுவலகங்களிலும், அதிகாரிகளையும், பெரியவர்களையும்

தற்காலத்தில் மதியாமை சிலரிடம் காணப்படுகிறது. சில அறிவிலிகள், தங்களுக்குக் கிடைத்த அரசியற் செல்வாக்கைப் பிழையான வழியில் பாவிப்பதே இதற்குக் காரணமாகும். இது அதிகாரிகளது உள்ளத்தைப் புண்படுத்தும் ஒரு செயல் மட்டுமன்றி, எதிர் காலத்தில் துன்பத்தை ஏற்படுத்தும் நஞ்சாக மாறும் என்பதை முன்கூட்டியே அறியமாட்டார்கள். அதிகாரிகள் பொறுத்தாலும் ஏதோ ஒருசந்தர்ப்பத்தில், அது செய்பவர்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்தும். இதற்கு விவேகசிந்தாமணி ஆசிரியர் உதாரணப் பாடலென்றைக் கூறுகிறார்.

"வில்லது வளைந்ததென்றும்
வேளம துறங்கிற்றென்றும்
வல்லியம் பதுங்கிற்றென்றும்
வளர்கடா பிந்திற்றென்றும்
புல்லர்தம் சொல்லுக்கஞ்சிப்
பொறுத்தனர் பெரியோ ரென்றும்
நல்லதென் றிருக்க வேண்டாம்
நஞ்செனக் கருதலாமே".

எனவே ஓர் அறிஞரை எந்த இடத்திலும் மதிப்பது மட்டுமன்றி அலுவலகங்களிலும் அவையிலும் மதிப்பதோடு அவர்கள் இட்ட கட்டளையைச் சரிவரச் செய்வதும் மேலான செயலாகும்.

உயர்ந்தோர் தாழ்ந்தோர்

உலகில் எல்லா ஜீவராசிகளும் பிறப்பால் ஒன்றுதான். ஆனால் மனிதனுக்குள் மட்டுமே ஏற்றத் தாழ்வு கடைப்பிடிக்கப் படுகிறது. பிராம்மணன் தமிழ் நாட்டுக்கு வந்ததும்; தம்மைப் பிரம்மனுக்கு நிகர் என்று கூறி, ஏனைய சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய பிரிவுகளையும் ஏற்படுத்தியதால், இன்று சாதி என்ற அரக்கன், பலரை ஆட்டிப்படைக்கிறான். ஆனால் பாரதி அதற்குப் பதிலடி கொடுக்கிறான். அவன் பிராம்மணனாய் இருந்தும், தாழ்ந்த சாதியைப் பற்றிச் சிந்திக்கிறான். இப்படி நினைப்பவர்கள் பாரதியின் கற்பனைபோல், நாமும் தாழ்ந்தவராய்ப் பிறந்திருந்தால் எப்படியிருக்கும் என நினைக்கிறார்களா? இல்லை. இதுபோல் பாரதத்தில் வருகின்ற பாடலொன்று இதற்கோர் உதாரணமாகும்.

"கற்றவர்க்கும் நலன்நிறைந்த
கன்னியர்க்கும் வண்மைகை
உற்றவரக்கும் வீரரென்று
உயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கும் உண்மையான
கோதில்ஞான சரிதராம்
நற்றவர்க்கும் ஒன்றுசாதி
நன்மைதீமை இல்லையால்"

மல்யுத்தத்தின்போது வீமனைத் தோற்கடிக்கப் போகிறானே என உணர்ந்து, கர்ணனிடம் நீயார், உன் குலம் என்ன? எனக் கேட்டபோது, துரியோதனன் கர்ணனுக்காக வக்காலத்து வாங்கி இவ்வாறு அவையில் முழங்குவதை நாம் அவதானிக்கிறோம்.

ஒருவன் மற்றவருக்கு வேண்டிய நேரத்தில் நன் மனத்தோடு கொடுத்தானாயின், அவன் உயர்ந்தவன்தான். கொடுக்காதவன் எப்போதும் தாழ்ந்தவன்தான். இதனைத்தான் ஔவையாரும்,

"சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி".

என்று பாடுகிறார். எனவே கொடுப்பவன் தாழ்ந்த சாதியாய் இருப்பினும் அவன் உயர்ந்தவன்தான். இரப்போர்க்கு ஒன்றும் கொடுக்காத உலோபியே தாழ்ந்தவனாவான் என நீதி நூல்கள் எடுத்துரைக்கின்றன.

உபகாரி அபகாரி

உபகாரம் என்பது ஒருவர் செய்த உதவிக்கு மாற்றீடாகச் செய்யும் நன்றிக்கடன் என்று கூறுவர். உபகாரி என்பது, எந்த நேரத்தில் ஒருவர் துன்பப்படுகிறாரோ, அந்த நேரத்தில் நல்லுதவி செய்பவரைக் குறிக்கும். இடுப்பிலிருந்து ஆடை வழுவியபோது, நம்மைத் தெரியாமலேயே நமது கையானது அந்த ஆடையைத் தாவிப் பிடித்துக் கொள்கிறது. இதுபோலவே ஒருவர் துன்பப் படும்போது, உடனேயே விரைந்து உதவி செய்வதே உண்மையான நட்பு ஆகும். இதனை வள்ளுவரும்,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு" என்கிறார்.

இந்தக்காலத்தில் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் அவகாரிகளே அதிகம். நல்லுதவி புரியும் உபகாரிகளைக் காண்பது அரிது அப்படிப் பட்டவர்களைக் காண்பது அரிது. உதாரணமாக, இராமனும்; இராவணனும் போர் செய்துகொண்டு இருக்கும்போது, இராவணனது அம்பறாத்துனியில் இருந்த எல்லா அம்புகளும் முடிந்து விட்டதால், இராவணன் வெட்கித்துக் குனிந்த தலையோடு, "நிறங் கரிந்திட விரல் நிலம் கிளர்ந்திட" நின்றான். இராமன் நினைத்திருந்தால், எனது உயிருக்கு உயிரான மனைவியைக் கடத்திச் சென்று, சிறை வைத்தவனை விடலாகாது என எண்ணி, ஒரு அம்புக்கே இராவணனை இரையாக்கி இருக்கலாம். ஆனால் அவன் இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா என்று கூறினானே! இதுதான் ஒரு பரோபகாரிக்கு உள்ள நல்ல குணம். ஆனால் இன்று சந்தர்ப்பம் பார்த்து வெட்டியோ, சுட்டோ வீழ்த்திச் சந்தோசங் காணும் மூடர்களே அதிகம். ஆயினும், நல்ல உள்ளம் கொண்டவர்களாக; விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் ஒருவர்

வாழ்வாராயின், அதுவொன்றே போதும். எல்லோரும் இன்புற்று வாழலாம்.

வீரன் கோழை

வீரம் என்பது பகைவரைப் போரில் வென்று பெயர் பெறுவது என்பர். ஆனால் மற்றவரை அநீதியாகத் துன்புறுத்தி வதைப்பது வீரமல்ல. அவ்வாறு சந்தர்ப்பம் பார்த்து வதைப்பது கோழைத்தனம். இராவணனுடன் போர்செய்கின்ற வேளையில், அவனுக்கு இராமன் உபகாரியாக மாறுகிறான் அல்லவா? அதுவே வீரம். எனவே உண்மையான வீரன், ஒருவர் உயிருக்குப் போராடிக்கொண்டு இருக்கும்போது எதிரியென்று பாராமல், அவனுக்காக உதவுவான். அவனே தலைவன். குறிக்கோள் நோக்கிப் பயணம் செய்யும் தலைவனின் கூரிய ஆயுதம் அறிவேயாகும். அவன் துன்பத்தில் இருந்து விடுவிப்பான். மரம் தறிக்கும்போது, கோடரியைக் கூர்மையாக்குவது போல் ஒரு ஆளுமை உள்ளவன், புத்தியைத் தீட்டியவனாக இருப்பான். அவனே சமுதாயத்தால் மதிக்கப்படும் மானிடனும் ஆவான்.

கட்டுரைத்தல்:

நாம் பேசுவதைக் கட்டுரைத்தல் எனவும் கூறுவர். மணிமேகலையில் "கட்டுரைவகை" என்ற ஒரு கலையின் பெயர் கூறப்படுகிறது. பெருங்கதை ஆசிரியர் "வாக்கின் விகற்பம்" என அதனைக் குறிப்பிடுகிகிறார். இன்னாரோடு இன்னபடி பேசவேண்டும் எனவும் இன்னபொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டும் என்பதையும், இலக்கியங்களை நுணுகி ஆராயும்போது அறியலாம். அரசரிடத்து ஒரு அறிவுரையையோ துயரச் செய்தியையோ நற் செய்தியையோ கூறப்புக முன்னர் அவர்களை வாழ்த்தி, அவரது பெருமைகளைப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர் வழக்கமாய் இருந்தது. இதுபோல் மனதுக்கு இன்பம் தரும் இனிய வார்த்தைகள் இருக்கத் துன்பம் தரும் கடிய வார்த்தைகளைப்

பேசக் கூடாது. அப்படிப் பேசுவது கனியிருக்கக் காயைப் பறிப்பது போலாகும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என வள்ளுவர் கூறுகிறார். ஆனால் நம் வாழ்வில் மற்றவர் மனம் நோகாதபடி பேசுவது மற்றவர்க்கும் நமக்கும் நல் விருந்தளிக்கும்.

கோபம் சாந்தம்

மனித வாழ்வில் ஒருவரை விட்டுப் பிரியாதிருப்பது கோபம். நம் வாழ்வில் பல்வேறுபட்ட மனிதர்களைச் சந்திக்கிறோம். பொறாமையால் உருவாவதும், மனிதனை ஆட்டிப்படைப்பதும் கோபமேயாகும். இதனை அடக்குவது கடினம். மற்றவரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகக் கோபப் படுவதுபோல; ஒருவர் நடிக்கலாம். இதனால் மற்றவர் பயப்படுவார்களே அன்றி, அதனால் தீங்கு ஏற்படாது. கோபத்தாலோ, தண்டனையாலோ ஒருவரைத் திருத்த முடியாது. பொறுமை, அன்பு என்பவற்றாலேயே மற்றவரைத் திருத்தமுடியும். "பன்றி தின்றவன் பரமஞானி" (பன்றி = கோபம்) என்பதுபோல, கோபத்தை அடக்கியவன் ஞானிக்கு நிகராகிறான். அன்பாயிருத்தல், இனிமையாகப் பேசுதல், நல்ல எண்ணங்களைக் கொண்டிருத்தல், உதவும் எண்ணங்களைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளால் எம்மிடமிருந்து கோபம் மெல்ல விலகும். இதுபோல ஆயிரக்கணக்கான வார்த்தைகளுள் துன்பந்தரும் வார்த்தைகளும் உண்டு

"வார்த்தை என்றால் ஆயிரமிருக்கு

வாசல் தோறும் வேதனையிருக்கு"

என்பதுபோல, இனிய வார்த்தைகளால் இன்பத்தையும்; கடிய வார்த்தைகளால் துன்பத்தையும் அனுபவிக்க நேரிடும். தீயைப் போன்று சுடுகின்ற வெங்காரம் என்ற மருந்து கொடியதாய்க் காணப்படும். ஆயினும், நோயைப் போக்கி உடல் நலத்தை உண்டாக்கும். விசமானது, குளிர்ச்சியைத் தரும். என்றாலும் பின்பு கொன்றுவிடும். அதுபோல நல்லவர் கடிய சொற்களைக் கூறினாலும் அது முடிவில் நன்மையையே தரும் என்பது,

"இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியும் மொழியும் கடுவே அனல்கொள்ளும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்ப
சிங்கி குளிர்ந்தும் கொலும்".

என்ற பாடல் மூலம் விளங்குகிறதல்லவா?. தோற்றத்தினால் எல்லோரும் மனிதர்களாகத் தெரியலாம். ஆனால் அவர்களது எண்ணத்துக்கும் செயலுக்கும் ஏற்ப; அவர்கள் பல்வேறு வகையாக மாறுகிறார்கள். மற்றவருக்குத் துன்பம் வந்தபோது; தமக்குத் துன்பம் வந்ததாக நினைத்துத் தாமும் வருந்தும் அருளாளரும் இருக்கிறார்கள். மற்றவருக்குத் துன்பம் வந்தபோது, சந்தோசம் அடைபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் இழி குலங்கள். இவ்வாறு துன்பப்படுபவரைக் கண்டு சந்தோசிப்பவரை இலக்கியங்கள் கீழ்மக்கள் அல்லது கயவர்கள் என்று கூறுகின்றன. நாம் எவ்வளவு செல்வங்களைச் சேர்த்தோம்! எவ்வளவு பதவிகளை வகித்தோம்? என்பதைவிட, எவ்வளவு பேருக்கு நல்வழியில் பயன்பட்டோம்? என்பதையே சான்றோர் பெரிதாகக் கருதுவர். சாந்தகுணம் உள்ளவர் பொறுமையைக் கடைப்பிடிக்கும் இயல்பு கொண்டவர்.

"சாந்தமும் பொறுமையும் சதா பலனைக் கொடுக்கும்.
அவசரப் புத்தியும் படபடத்த முற்போபமும்
பிற்பலனைக் கெடுக்கும்"

என இந்தியாவைச் சேரந்த ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வராநந்தகிரி சுவாமிஜீ அவர்கள் கூறுகிறார். எனவே

சாந்த குணம் உள்ளவர் நல்லவர்களாகவே வாழ்வர். கோபம் உள்ளவர் துர்க்குணம் உடையவர்களாக மாறுவர். சாந்த குணம் வந்தாலேயே சாந்தியும் அதனால் சமாதானமும் ஏற்படும்.

நன்மையும் தீமையும்

வாழ்ககை என்பது ஒரு அருமையான கலை. அதன் அருமை பெருமைகளை நினைத்துச் சந்தோசமாக வாழக் கற்றுப் பிறரையும் சந்தோசமாக வாழ வைப்பதே மிக அருமையானது. இதனை முன்னோரின் அறிவுரையோடு நம் அனுபவத்தையுங் கொண்டே வாழ்வது புத்திசாலித் தனம். "வாழ்க்கை ஒரு சுமை. எனது பிறவியே வீண்" என்றே சிலர் புலம்புகிறார்கள். பிறப்பு என்பது தொடர் வினை என்றும் கூறுகின்றனர். ஒவ்வொருவரும் தாம் செய்யும் செயல்களுக்கு ஏற்பவே பலன்களை அனுபவிக்கினறனர் என முன்னோர் கூறுவர். முற்பகல் செய்யின் அது பிற்பகல் விளையும் என்பதற்கேற்ப இவ்வாழ்வில் புண்ணியம் அல்லது நன்மை செய்தால் இன்பத்தையும், பாவம் அல்லது தீமை செய்தால் துன்பத்தையும் அவரவரே பின்னர் அனுபவிக்கின்றனர். இது இன்னொருவரால் ஏற்படுத்தப் படுவது அல்ல. இதுபோல் இறப்பு என்பது புதுமையானது அல்ல இதையே,

"தீதும் நன்றும் பிறர்தரவாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்னச்
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்"

எனப் புறநானூறு கூறுகிறது. ஒருவர் நன்மை செய்தால் அதனை நீண்டநாள் வைத்திருப்பதில்லை. அவர்கள் யாவரிடத்தும் அன்புடன் நடமாடுவர். கெடுதல் செய்தால், அதைச் சுலபமாக மறப்பதும் இல்லை. இப்பேற்பட்டவர்கள் எப்போது பழிவாங்கலாம் என எதிர் பார்த்து மறைந்து இருப்பர் கயவர்.

"நஞ்சுடமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு – நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பார் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்."

என்பதுபோல, மனதில் வஞ்சனை உடையவர், தம் கெட்ட தன்மையை மறைத்து வாழ்வர். இவர்களைத் திருத்துவதும் அரிது. இவ்வெண்ணம் மாறிச் சகிப்புத்தன்மை ஏற்படும்போது தான், மனிதன் புனிதன் ஆகிறான். நாம் ஒருவருக்கு நன்மை செய்தால், அதனை மறந்துவிட வேண்டும். பிறர் துன்பம் செய்தால், அதனையும் மறந்துவிட்டு; அவருக்குத் துன்பம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் உதவினால், அவன் தன்னை அறியாமலேயே நாணி வெட்கம் அடைவான். இதனை

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்." எனவும்,
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எனவும் வள்ளுவர் கூறுகிறார். இராமனோ இராவணனுக்கு இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா என்றான். ஆனால் நாம் என்ன செய்திருப்போம் இதுதான் தருணம் என்று அவனைக் கொன்றிருப்போம் அல்லவா? அப்படிச் செய்திருந்தால் அது தீமை என்கிறது தர்மம். எனவே நம் வாழ்வில் உள்ளத்தாலும் தீங்குசெய்ய நினைக்கக் கூடாது.

பாவம் புண்ணியம் :

சிறு வயதில் நாம் தெரியாமல் பாவம் செய்திருப்போம். புத்தி புரிந்தபின்பு, "பாவம் செய்யாதே, பொறாமை கொள்ளாதே, செய்வினை(சூனியம்) செய்யாதே, ஏமாற்றிப் பிழைக்காதே, சொர்க்கத்தையும் நரகத்தையும் இங்கேயே அனுபவிக்கிறோம்" என்பன வாழ்வியலின் தத்துவங்கள். நாம் செய்த பாவ - புண்ணியங்களை இவ்வுலகிலேயே அனுபவிப்பதோடு, பிள்ளைகள் - பேரப் பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டி ஏற்படும். முற்பகல் செய்தால் அது பிற்பகல் விளையும். என்றெல்லாம் நீதிநூல்கள் கூறுகின்றன.

"எந்த வார்த்தையால் ஒருவரை அவதூறாகப் பேசுகிறாயோ?
அந்த வார்த்தையால் ஒருவனால் நீ பேசப்படுவாய்"

என விவிலியவேதம் கூறுகிறது. பிறர் சொத்தை அபகரித்தவன் கடைசியில் நிம்மதியாகச் செத்தது உண்டா? கொலை செய்தவன் நிம்மதியாகச் செத்தது உண்டா? அவன் செய்த பாவம் இறுதியில் துன்புறுத்திவிடும். தாய் தந்தையருக்குப் பாவம் செய்துவிட்டும், கொலை களவு சூது அனைத்தும் செய்துவிட்டும், கடவுளே கடவுளே என்று வணங்கினால் பாவம் தொலைந்துவிடுமா?

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும்

சொந்தமே நாங்கள் செய்ததனால்..."

"நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு" என்றெல்லாம் நூல்கள் கூறினாலும்

"தவறு என்பது தவறச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்தப் பாக்கணும்
தப்புச் செய்தவன் வருந்தி ஆகணும்"

என்பதுபோல அறியாமல் செய்த வினைக்கு மன்னிப்பு உண்டு. தருமம் தலைகாக்கும். என்ற ஆன்றோர் வாக்குக்கு ஏற்ப நாம் நன்மை செய்து நல்வாழ்வு வாழ்வோமாக.

இன்பமும் துன்பமும் :

மனிதனுக்கு இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் மாறிமாறி வருவது வழக்கம். பற்றற்றவனையும் துன்பம் பீடித்துத்தான் இருக்கும். இன்பம் வரும்போது மனிதன் குதூகலித்துச் சிரிக்கிறான். துன்பம் வந்தபோது மண்ணில் புரண்டு புரண்டு அழுகிறான். "இடுக்கண் வருங்கால் நகுக" அதாவது துன்பம் வந்தபோது சிரியுங்கள் என வள்ளுவன் கூறினாலும் நம்மால் சிரிக்க முடியுமா?. இரண்டையும் சமனாக மதித்து, சகித்து வாழ்பவனே மனிதன். இவை வண்டியின் சகடக்கால் போல வாழ்வில் மாறிமாறி வருவது. இன்புறண்டிய விடயத்தைச் செய்து கொண்டு இருக்கும்போது அது துன்பத்திலும் முடியலாம். ஒன்றை நினைத்தல் அதுவன்றி

வேறொன்றாகவும் ஆகிவிடலாம். அவை யாவற்றையும் இறைவன் செயல் என்று அமைதி காண்பது நன்று இதையே ஔவையாரும்

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் - அன்றி
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாழும் ஈசன் செயல்."

என்கிறது நீதிநூல். ஆனால் எதிர்காலத்தில் துன்பங்களில் இருந்து விடுபடப் பெரியோர்கள் கூறும் வழியானது இறைவனை வேண்டிக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். அத்தோடு ஏழ்மை வந்துற்ற போதிலும் தர்மம், சத்தியம், நியாயம், இரக்கம், நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்தால், ஒருபோதும் இறைவன் எம்மைக் கைவிட மாட்டார். இக்கலியுகத்தில் ஏமாற்றம் வந்தாலும், தெய்வ நம்பிக்கை நம்மைக் கைவிடாது, இறுதிவரை பாதுகாகக்கும் எனப் பெரியோர் கூறுவர்.

வெற்றியும் தோல்வியும்.

சாதாரண நிலையில் வாழ யாரும் விரும்புகிறார்களா? அது துறவிகளுக்கு மட்டுமே பொருந்தும். ஏனையவர்கள் வெற்றியையே விரும்புவர். வெற்றி நோக்கு என்பது, தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஒரு மன நிலையாகும். தோல்வி நிரந்தரமானது அல்ல. தோல்வியை வெற்றியாக மாற்ற முடியும். வெற்றி நோக்குடன் செயற்படுபவர்கள், எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அனைத்திலும் முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஒழிந்துகொண்டு இருப்பதைக் கண்டு பிடிப்பார்கள். எனவே விருப்பம் மட்டும் இருந்தால், வெற்றி கிட்டாது. வெற்றி பெறவேண்டும் என்ற தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கை மலையையே அசைக்க வல்லது.

தோல்வியுற்ற பலரிடம் வினவினால், சிலர் தொடங்கும் போதே வெற்றிபெற மாட்டேன் என்ற ஐயம் ஆரம்பத்தில் எனக்கு இருந்தது எனக் கூறுவார்கள். அதனால் தோல்வி கிடைத்தது. வெல்வேன் என்ற நம்பிக்கையும், ஊக்கமும், கடவுள் நம்பிக்கையும் இருந்தால், அவன் வெற்றியடைவான். வாழ்வில் முன்னேறுபவர்களைப்

பாருங்கள் தங்கள் திறமையை உயர்வாக நினைத்து நம்பிக்கையுடன் எதனையும் செவ்வனே செய்ய முனைவதால், அவர்கள் அதி தீவிரத்துடன் செயலாற்றி முன்னேறுவார்கள்; வெற்றியும் பெறுவார்கள். நடந்தவைகளைப் பற்றியோ; நடக்கப் போவதைப் பற்றியோ கவலைப்படுவதை விடுத்து; நிகழ் காலத்தைப் புரிந்துகொண்டு, காலத்தைக் கழிப்பதில் பயன் இல்லை. "இனியொரு விதிசெய்வோம்" என்ற பாரதியின் எண்ணம்போல, நாளை நமதே என்பதை மாற்றி; இன்றும் நமதே என்ற கட்டுருவாக்கத்துடன் வாழ்வதோடு; இளந் தலைமுறையினர்க்கும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பாடுபடுவோம் என்று ஊக்கமளித்து, வாழ்வில் வெற்றியுடன் வாழ்வோமாக.

முடியாதது என்ன?

மனிதனால் முடியாதது என்ன இருக்கிறது?. இறையருள் இருந்தால், எதையும் சாதிக்கலாம் என்பதை நாம் அறிவோம். கையால் முடியாதவன், காலால் எழுதப் பழகவில்லையா? சுத்திரம் தீட்டவில்லையா? காலில்லாதவன் உருளையை கையால் உருட்டிச் செல்லவில்லையா? நீருள் நீந்தவில்லையா? இவ்வாறு உடல், உள ஊனமுள்ளவரும், ஏதோ ஒருவகையில் வாழவில்லையா? தொழில் செய்து இலாபம் அடைந்த நீ, இந் நிலைக்கு உள்ளாக்கிய உன் சமுதாயத்துக்கு என்ன செய்தாய்?. எதற்கும் மன வலிமை வேண்டும். எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதில் வல்லவர்கள், உடலுக்கு ஏற்படும் எவ் வருத்தத்தையும் கவனிக்க மாட்டார்கள். இவர்கள்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப் புங்கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்".

என நீதிநெறிவிளக்கம் கூறுகிறது. இதுபோலப் பிறருக்காகச் சேவை செய்து எல்லோரும் ஒன்றே என்ற எண்ணம் ஏற்படால், சமுதாயத்தில் அடிமைத் தளை நீங்கிச் சகோதரத்துவம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு என்பன ஏற்படுவதோடு, கயவர்களின் காமுகத் தன்மையும் நீங்கினால்,

எவரும் எதனையும் சாதித்துப் பிறவிப்பயனை அடையலாம் என்பது திண்ணம்.

எனவே ஏனைய உயிரினங்களைப் போல நம் பிறப்பை எண்ணாது, எமக்குக் கிடைத்த இம் மானிடப் பிறவியை உயர்ந்ததாக எண்ணி, நம் வாழ்வில் நன்மனத்தோடு "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பரின் வாக்குக்கு ஏற்ப நாளும் பிறருக்காக உதவிசெய்து வாழ்வாங்கு வாழ்ந்து எடுத்த பிறவியின் பயனை அடைவேமாக.

வாழ்க மானுடம்: வாழ்க வையகம்,

பின்னிணைப்பு

சிரிப்பின் அர்த்தங்கள்:-

கற்பனையில் சிரிப்பவன்	- கவிஞன்
கண்பார்த்துச் சிரிப்பவன்	- காரியவாதி
காணாமற் சிரிப்பவன்	- கஞ்சன்
கோபத்திற் சிரிப்பவன்	- வெறியன்
தெரியும் என்று சிரிப்பவன்	- பசப்பாளன்
தெரியாதென்று சிரிப்பவன்	- நடிகன்
தெரியாமற் சிரிப்பவன்	- பைத்தியக் காரன்
இடம்பார்த்துச் சிரிப்பவன்	- எத்தன்
எப்போதும் ஓடவிட்டுச் சிரிப்பவன்	- கோமாளி
நீதியோடு சிரிப்பவன்	- அறிஞன்
நிலை மறந்து சிரிப்பவன்	- காதலன்
செயல்கேட்டுச் சிரிப்பவன்	- பச்சோந்தி
செருக்குடன் சிரிப்பவன்	- ஆண்டி
துன்பத்திலும் சிரிப்பவன்	- மனிதன்.

பேச்சின் அர்த்தங்கள்:-

கோபமாகப் பேசினால்	- குணத்தை இழப்பாய்
அதிகமாகப் பேசினால்	- அமைதியை இழப்பாய்
வெட்டியாகப் பேசினால்	- வேலையை இழப்பாய்
வேகமாகப் பேசினால்	- அர்த்தத்தை இழப்பாய்
ஆணவமாகப் பேசினால்	- அன்பை இழப்பாய்
பொய்யாகப் பேசினால்	- பெயரையே இழப்பாய்
சிந்தித்துப் பேசினால்	- சிறப்பாய் இருப்பாய்
சிரித்துப் பேசினால்	- அன்போடு இருப்பாய்

கடமை:-

நாம் காலையில் எழுந்தது முதல், பல்வேறுபட்ட கடமைகளைச் செய்கிறோம். கடமையைச் சரிவரச் செய்பவனே மனிதன். அதைக் கடமைக்காகச் செய்யாமல் கடமை என்ற உணர்வோடு செய்வோம். அதில் வெற்றியோ தோல்வியோ எது வரினும் அதற்கு அஞ்சக்கூடாது இதில், யார் பாராட்டினாலும் பாராட்டா விட்டாலும் கவலையை விடுவோம் நமது திறமையும் நேர்மையும் வெளியாகும்போது தான்பகைவரும் மதிப்பார். இத்தோடு ஏனைய உயிர்களோடு, அன்பும், ஜீவகாருண்யமும் நன்மனமும் ஏற்படும் போது கடவுள் இரங்குவார்.

தீபங்கள்:-

தீபங்கள் எல்லோருக்கும் ஒளியைத் தருவதனால் சகல மதத்தவருக்கும் தீபம் அல்லது விளக்கு முக்கியம் பெறுகின்றது. குத்து விளக்கு ஏற்றும்போது; அவை செய்யப்பட்ட உலோகம், திரிகளின் எண்ணிக்கை, அவை ஏற்றப்படும் திசை, நேரம் என்பவற்றைப் பொறுத்து அவற்றின் மகிமை அமையும்.

அதிகாலையில் விளக்கேற்றுவது சர்வ மங்களத்தையும்;

மாலை நேரத்தில் விளக்கேற்றுவது குடும்ப சுகத்தையும்;

வாழ்வில் மங்களத்தையும் தரும்.

மண் விளக்கு, வெள்ளி, பஞ்சலோக விளக்கு என்பன -

பூஜைக்கு உகந்ததாகக் கருதப் படுகின்றன.

வெங்கல விளக்கில் தீபம் ஏற்றினால் - பாவங்கள் போகும்.

இரும்பு விளக்கில் தீபம் ஏற்றினால் - நட்புறவு உண்டாகும்.

இரும்பு விளக்கில் சனிக்கிழமைகளில் ஏற்றினால் - சனிப்பிரீதி உண்டாகும்.

எவர் சில்வர் விளக்குப் பயன்படுத்துவது உசிதமல்ல. விளக்குகளைத் தரையில் வைக்கக் கூடாது. தட்டிலோ, வாழையிலையின் மேலோ வைக்க வேண்டும். விளக்கினது ஐந்து முகங்களுக்கும் விளக்கம் உண்டு.

ஒரு முகம் - மத்திய பலன் உண்டாகும்.

இரு முகம் - குடும்ப ஒற்றுமை பெருகும்.

மூன்று முகம் - புத்திர, பந்துமித்திர சுகம் உண்டாகும்.

நான்கு முகம் - பசு, பூமிப் பாக்கியம் உண்டாகும்.

ஐந்து முகம் - செல்வம் தரும். ஐந்து முகங்களும் (ஈசானம், வாமதேவம் சத்யோதயம், தத்புருஷம், அகோரம் என) மகேஸ்வரனைக் குறிக்கும்.

இதுபோல் திரிகளை எடுத்துக்கொண்டால் அவற்றுக்கும் விளக்கம் உண்டு.

இலவம் பஞ்சுத் திரி – சுக விருத்தி உண்டாகும்.

தாமரை நூல் திரி – தீவினை போக்கும், செல்வத்தை நிலைக்கச் செய்யும்.

வாழைநூல் திரி – குழந்தைப் பாக்கியம் கிடைப்பதோடு, தெய்வக் குற்றம் , குடும்ப சாபம் நீங்கும், செய்வினைக் கோளாறு நிவர்த்தி.

வெள்ளெருக்குத் திரி – (இதன் பட்டையைத் திரித்துப் போட்டால்) - பெருத்த செல்வம் சேரும், பேய் பிடித்தவர்களுக்குத் தொல்லை நீங்கும்.

மஞ்சள் நிறத் திரி – அம்மன் அருள் கிட்டும், வியாதி குணமடையும்.

சிவப்புத்திரி – திருமணத்தடை, மலட்டுத்தன்மை, பிசாசு, செய்வினை, தோசம் என்பன நீங்கும், மகப்பேறு உண்டாகும்.

வெள்ளைத் திரி – வெள்ளைத்துணியைப் பன்னீரில் நனைத்துக் காய வைத்துப் பயன்படுத்தினால், அம்மன் அருள் கிட்டும், நல்ல பயன் கிடைக்கும்.

இவ்வாறு நல்ல வகையில் பயன்படுத்தி அக இருளையும், புற இருளையும் போக்கி, நல்வாழ்வு வாழ்வீராக.

"திருவிளக்கு இட்டாரைத் தெய்வம் அறியும்."

தீபம் ஏற்றும்போது

கிழக்குத்திசை நோக்கி ஏற்றினால் - துன்பம் ஒழியும், கிரக பீடை அகலும்.

மேற்குத் திசை நோக்கி ஏற்றினால் - கடன் தொல்லை நீங்கும், சனிப்பீடை அகலும், விரோதங்களைப் போக்கும்.

வடக்குத்திசை நோக்கி ஏற்றினால் - திரண்ட செல்வம் சர்வமங்களம் உண்டாகும், திருமணத்தடை நீங்கும், அறிவு வளர்ச்சி, சுபகாரியங்கள் நடக்கும்.

தெற்குத் திசை நோக்கி தீபம் ஏற்றுதல் கூடாது என ஆன்றோர் கூறுவர்.

மேல்நோக்கி நெடிதாய் எரியும் சுவாலை, ஆரோக்கியத்தையும் சுகபோகத்தையும் தரும்.

தீபம் ஏற்ற.....

பசு நெய் - சகல சுகத்தையும் தரும்.

தேங்காய் நெய் - கணபதிக்கு உகந்தது, மனவுறுதி கிடைக்கும்.

நல்லெண்ணெய் - விஷ்ணுவுக்கு உகந்தது. பீடைகள் விலகும். புகழ், உடல் நலம், மனவலிமை சேரும்.

நெய் - மகாலெட்சுமிக்கு உகந்தது. சகல சுகமும் செல்வமும் சேரும். லட்சுமி கடாட்சம் உண்டாகும், கிரக தோசம் விலகும்.

ஆமணக்கெண்ணெய் - குலதெய்வ கடாட்சம், புகழ், சிறந்த வாழ்க்கை. அத்தோடு உறவினரால் நன்மை கிட்டும்.

இலுப்பெண்ணெய் - அம்மன் அல்லது காளியினருள் கிட்டும்.

வேப்பெண்ணெய் - ருத்ர தேவதைகளின் அருள் கிட்டும்.

கடலை எண்ணெய் - உபயோகிக்கக் கூடாது.

ஏன் தீபங்களை மூன்றுமுறை சுற்றிக் காட்ட வேண்டும்?

முதலில் சுற்றுவது - உலக நன்மைக்காகவும்,

2வது முறை சுற்றுவது - கிராமத்தின் நன்மைக்காகவும்,

3வது முறை சுற்றுவது - உயிர்களின் நன்மைக்காகவும் என ஆகமங்கள் கூறுகின்றன. அந்தி நேரத்தில் விளக்கிட்டால் சிலவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

"அந்திப் பொழுது கிடவார் நடவாரே

உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்அந்தி

அல்குண்டு அடங்கல் வழி."

அதாவது, அந்தி நேரத்தில் படுத்துறங்கக் கூடாது, தொலைதூரம் நடக்கக் கூடாது, உண்ணக்கூடாது, பிறர்மீது கோபங் கொண்டு பேசக்கூடாது, அந்திவிளக்கு ஏற்றத் தவறக்கூடாது, அந் நேரத்தில் வெளிச் செல்லாமல் வீட்டில் இருப்பதே மேல் என ஆசாரக்கோவை நம் வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

தியானம்:-

ஒவ்வொரு சமயத்தவருக்கும் தியானம் அவசியம். சரியான வழியைக் கடைப்பிடித்துத் தியானம் செய்தவர்கள், நிம்மதியோடு நீண்ட ஆயுளும் பெற்று வாழ்ந்திருக்கிறார்கள். மனம் கெட்டால், குணம் கெடும். குணம் கெட்டால், எல்லாம் கெட்டு வாழ்வே அழிந்துவிடும். தோஷமுள்ள மனத்துடன் தியானம் செய்தால், எவரும் வெற்றிபெற முடியாது. ஆசை, அச்சம், மயக்கம் அனைத்திலிருந்தும் விடுதலைபெற வைப்பதே தியானம் ஆகும். பஞ்ச பூதங்களும் நமக்குச் சாதகமாய் அமையும். எமது ஐந்து விரல்களுள்,

கட்டை விரல் - நெருப்பு

சுட்டுவிரல் - காற்று

நடு விரல் - ஆகாயம்

மோதிர விரல் - நிலம்

சிறிய விரல் - நீர். எனச் சித்தர்கள் கூறுவார்கள்.

காலையிலும் மாலையிலும் ஓர் ஆசானின் அறிவுரையுடன் 20 நிமிடங்கள் உரிய முத்திரையைத் தேர்வு செய்து தியான நிலையில் அமருங்கள். எல்லா மதத்தவரும் இதனை கடைப்பிடிக்கலாம். மூச்சை உள்ளேயும் வெளியேயும் நன்கு உள்ளிழுத்து விடுங்கள். மந்திரமோ, வேறு செயல்களோ தேவையில்லை. இதனால் சிந்தனை வளரும், மூட்டு வருத்தம் குணமடையும், காது கேட்கும், உடல் வலிமை உண்டாகும், இரத்தம் சுத்தமடையும், மாரடைப்பு, நெஞ்சுவலி, குடல்வலி, பதற்றம், இரத்தக் கொதிப்பு என்பன ஏற்படாது. நீண்ட ஆயுள் கிடைக்கும். இதனை,

"உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்

கருத்தினில் இருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்

விருத்தருமே பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்

அருள்தரித்த அப்பனாணை அம்மையாணை யுண்மையே"

எனச் சிவாக்கியர் பாடுகிறார். எனவே உள்ளத்தை ஒருவழிப்படுத்தி, வாழ்வில் வெற்றி பெறப் பின்வரும் விடயங்களைத் தவிர்த்தக்கொள்ள வேண்டும்.

1. ராகம் - பிறர் பொருளில் ஆசைப்பட்டு, அதை அடைய எண்ணுதல்.

2. துவேஷம் - ஒருவர் மீது எப்பொழுதும் வெறுப்புடன் விரோதத்தை வளர்த்தல்

3. காமம் - பேராசை என்னும் அதிகளவு ஆசையைத் தூண்டுதல் , தீயவழியில் செல்லும் ஆசையாகும்

4. குரோதம் - நாம் பிறர் மீது காட்டும் பிழையான எண்ணங்கள் ஆகும்

5. உலோபம் - தன்னிடம்முள்ள எந்தப் பொருளையும், யாருக்கும் கொடுக்காமல் இருத்தல்

6. மோகம் - பொருட்கள் மீதும் பூமி, எதிர்ப்பாலார் , வாகனங்கள் மீதும் அளவற்ற ஆசையை குறிக்கும்

7. மதம் - செருக்கு, கர்வம் என்று கூறப்படும் சிறிய பிழைகளையும் பெரிதுபடுத்தல், குறை சொல்லுதல்.

8. மாற்சரியம் - அடுத்தவரின் வாழ்க்கையைப் பார்த்துப் பொறாமை கொள்ளுதல்.

9. இரட்சியம் - தன் கஷ்டங்களைப்போல் மற்றவருக்கும் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம்.

10. அசூயை – பிறரைப்பார்த்து முகம்சுளித்து, பொமையுடன் அருவருத்துப் பிறரையும் மதியாது, அவரையும் அனுபவிக்க விடாது தடுத்தல்.

11. இடம்பம் - பகட்டாக வாழும் குணம். தன்னிடம் உள்ளதைப் பெருமித்துப் பேசுதல்.

12. தர்ப்பம் - நானே பெரிய வீரன் எனக்குத்தான்; எல்லாம் தெரியும் என்ற குணமாகும்.

13. அகங்காரம் - நானே பெரியவன்; மற்றவர்கள் சிறியவர்கள் என்ற அகந்தையாகும். இது அமைதியை அழித்துப் பகைமையையும் எதிர்ப்பிபையும் அதிகப்படுத்தும்.

எனவே நாம் உள்ளத்தில் நல்ல எண்ணம் கொண்டவராக நல்ல சிந்தனையுடன் தியானித்தால் வாழ்வாங்கு வாழ வழிகிடைக்கும் என்பது திண்ணம்.

மாங்கல்யம்:-

கணவனால் மனைவிக்கு அணியப்படும் தாலி, மாங்கல்யம் எனப்படும். கணவனின் உயிர் இருக்கும்வரை அது மனைவியின் கழுத்தில் நிலைத்திருக்கும். இது 09 இழைகளைக் கொண்டதன் தத்துவம்

1. புரிந்துணர்வு
2. மேன்மை
3. ஆற்றல்
4. தூய்மை
5. தெய்வீக நோக்கம்.
6. உத்தம குணங்கள்
7. விவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு

இவற்றை ஒருபெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில்தான் மாங்கல்யம் அமைக்கப் பட்டது.

நோயில்லா வாழ்வு:

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் சுகதேகியாக வாழ வேண்டும் என்றே நினைக்கின்றனர். ஆனால் மேலே கூறிய விடயங்களை ஒருவர் சரிவரக் கடைப்பிடித்தாராயின்

ஒவ்வொருவருக்கும் உரிய ராசிக்கு ஏற்ப ஜாதகத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் ஆயுளைவிடக் கூடுதலானகாலம் வாழலாம் எனச் சில உபாயங்களை ஞானிகள் காட்டியிருக்கிறார்கள்.

"திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்

பெண்ணின் பாலொன்றைப் பெருக்காமல் - மண்ணில்

நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பார்தம்

பேருரைக்கிற் போமே பிணி"

என்ற பாடல் வாழ்க்கையின் தத்துவத்தை அழகுற எடுத்துக் காட்டுகிறது. இதுவே வாழ்வின் உபாயம். ஆதலால் எமக்குக் கிடைத்த இம் மானிடப் பிறவியில் மேலே அறிஞர்களால் கூறப்பட்ட நல்லுரைகள் யாவற்றையும் சிரமேற்கொண்டு நல்லறிவு நாளும் தலைப்பட வாழ்வு ஒளிரும், பிறவிக்கேற்ற பயனும் கிடைக்கும்.

வாழ்வு நலமாக

- அதிகாலை விழித்து நன்மைகள் நினைப்போம்.
- அன்னை தந்தையரைக் கருத்தினில் வைப்போம்.
- இயற்கைக் கடன்களை கிரமமாகக் கழிப்போம்.
- தேகாப்பியாசம், தேக முயற்சிகள் செய்வோம்.
- காலையில் குளிப்பதைக் கிரமமாகக் கொள்வோம்.
- உணவின் முன், கைகளைச் சுத்தமாய்க் கழுவுவோம்
- உணவின் தரத்தை, ஊன்றி நோக்குவோம்.
- இலைக்கஞ்சி, தானியம் காலையுணவாக்குவோம்.

- பச்சை மூலிகை தினசரி சேர்ப்போம்.
- மதிய உணவை, நேரந் தவறாது உண்போம்.
- கொதித்து ஆறிய நீரை, நிரம்பவே அருந்துவோம்.
- உண்டதும் ஓய்வு, உரிமையாய்ச் சிறிது எடுப்போம்.
- உண்டபின் நூறு அடியேனும் உலாவுவோம்
- பகலில் உறக்கத்தைப் பகையாய் எதிர்ப்போம்.
- மாலையில் மகிழ்வாய் உடலைக் கழுவுவோம்.
- சூடான நல்லுணவை இரவில் உண்போம்.
- இரவுணவின் பின்பு, பழவகைகள் உண்போம்.
- உறங்குமுன் , தியானத்தில் மனச்சுமை போக்குவோம்.
- உறங்கும் போது, நம்மை இறைவனிடம் ஒப்புவிப்போம்.
- மீள்வலுப் பெற்றிட, நல்லுறக்கம் கொள்வோம்.
- வாரத்தில் ஒருமுறை, நகங்களை நறுக்குவோம்.
- வாரத்தில் ஒருமுறை, எண்ணெய் முழுக்கினை நிச்சயம் செய்வோம்.
- இறைச்சி, கீரை, பழவகை முழுகிய நாளில் தவிர்ப்போம்.
- கடின உழைப்பும் , அலைச்சல் , கண்விழிப்பும் அன்று தவிர்ப்போம்.
- மாதத்தில் ஒருவேளை, பட்டினியாய் இருப்போம்.
- வருடத்துக்கு இருமுறை சுகபேதி செய்வோம்.
- ஆசைகள் வளர்த்து, வேதனை கொள்ளோம்.

- உழைப்பின் திருப்தியை, மனதிற்குக் கொடுப்போம்.
- பணத்தினால், சுகத்தைப் பெற்றிட மாட்டோம்.
- பணம், பொருள், உழைப்பில் நிதானமாய் வாழ்வோம்.
- நம்பிக்கை அதனை, மனதில் வளர்ப்போம்.
- துன்பங்கள் தாங்கித் துணிந்து வாழ்வோம்.
- நலம் எனும் செல்வத்தை, நம்மிடம் சேர்ப்போம்.
- நிம்மதி அளிக்கும் பண்பினை வளர்ப்போம்.
- அனைவர்க்கும் உதவி, அன்புடன் வாழ்வோம்.
- நலமும், அறிவும் நிறைந்து உயர்வோம்.
- நெடிது வாழ்ந்து, நன்மைகள் செய்வோம்.

நலமே வாழ்வு

தியானம் - 1

உறங்கும் முன்பு சுவாமி அறையிலோ, படுக்கை அறையிலோ, பாய் அல்லது விரிப்பின் மேல் இருந்து ஜெபிக்கவேண்டியது. "இறைவா! இன்று எனக்குப் பல நல்லகாரியங்களும், சந்தோசமும் ஏற்பட்டன. (என் மனதுக்கு இப்படிப்பட்ட கசப்பான சம்பவமும் ஏற்பட்டது.) அவை யாவற்றையும் உமது குழந்தை என்பதால் நான் உம்மிடத்திலேயே ஒப்புவிக்கிறேன். யாவையும் ஏற்றுக் கொள்வீராக. அத்தோடு, விடியும்வரைத் துன்பத்திலிருந்து பாதுகாக்க என்னை உம்மிடத்திலேயே ஒப்படைக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்வீராக". நன்றி.

தியானம் - 2

நித்திரை விட்டு எழுந்ததும் நாம் மேற்கூறியவாறு தனியிடத்திலிருந்து தியானிக்க வேண்டியது. "இறைவா! கடந்த இரவிலே எனக்கு எவ்வித துன்பமும் வராமல் பாதுகாத்து விட்டீர். இன்றைய நாளிலே எனக்கு எவ்வித துன்பமோ, இடையூறோ வராமலும் நான் எவருக்கும் தீங்கு நினைக்காமலும் இருக்க, என்னுடன் இருந்து என்னைப் பாதுகாப்பீராக". நன்றி.

ஆசிரியரைப் பற்றி .....

செட்டிபாளையத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. தா. கோபாலகிருஷ்ணன் ஆசிரியர் அவர்கள், களுவாஞ்சிகுடியில் நல்வாழ்வு கொண்டு, அங்கே பல்லரிய நற்சேவைகள் செய்து பாராட்டுப் பெற்றவர். ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரை செட்டி பாளையம் ம.வித்தியாலயத்தில் கற்று, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி, அங்கு தமிழ் சிறப்புப் பட்டத்தையும், பின்பு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர்.

1985ஆம் ஆண்டு ஆசிரியசேவையில் இணைந்த இவர் 2000ஆம் ஆண்டுவரை மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயத்திலும், 2012ம் ஆண்டுவரை மட்/குருமண்வெளி சிவசக்தி. ம. வித்தியாலயத்திலும், 2016ம் ஆண்டுவரை மட்/எருவில் கண்ணகி ம.வித்தியாலயத்திலும் சேவையாற்றினார். இவரது காலங்களில் க.பொ.த. சா/தர, க.பொ.த. உ/தர மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடத்தில் மிகச் சிறந்த பெறு பேறுகளைப் பெறச் செய்து, மாவட்ட மட்டத்தில் பாராட்டுப்பெற்றவர். வேதனம் எதிர்பாராது இலவசமாகப் பிரத்தியேக வகுப்புக்கள் வைக்கும் இவரது செயற்பாடுகள், வரவேற்கத்தக்க ஒரு நற்பணியென்றே கூறவேண்டும்.

இவரது காலத்தில் களுவாஞ்சிகுடி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கெனக் காணி ஒன்றை வாங்கி பாலர்பாடசாலை ஒன்றை அமைக்கவும் பல்தேவைக் கட்டிடம் ஒன்று அமைக்கவும், வருமானம் குறைந்தவர்களுக்கு அடிப்படைத் தேவை வசதிகள் பல கிடைக்கப் பாடுபட்டும், சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சர்வோதய சங்கத்தினால் நடாத்தப்பட்ட கூஷ்கூஷிசிறுவர் சமூகப் பாதுகாப்பு வலையப் பின்னல்;; திட்டத்தின் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு கூஷ்கூஷிசர்வோதய சங்கத்தின்;; ஆதரவுடன் உளவள வகுப்புக்கள் வைத்தும், அவர்களுக்கென யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் "இன்பச்சோலை" என்ற சிறப்பான சிறுவர் நூல் ஒன்று வெளியிட்டும் பாராட்டுப்பெற்றவர். இவர் ஓய்வு நேரங்களில் கட்டுரை, சிறுகதை, நாடகம், கவிதை என்பன எழுதித் தமிழுலகுக்கு வளஞ் சேர்ப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இதுபோல் எதிர்காலத்திலும் அளப்பரிய சேவைகள் செய்து வாழ்வாங்கு வாழ, எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

கலாபூசணம் மு.தம்பிப்பிள்ளை (B.A, P.G.D.E)
முன்னாள் தொ.கல்விப் போதனாசிரியர்
குருமண்வெளி - 11, களுவாஞ்சிகுடி.

அக்ஷயன் அச்சகம், பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை. T.P: 065 - 2056994